മംഗളോദയം
VII No. 9 Sep 1929

JL
ജൂ21LNK BA.
M29.11.9.
210778

REGD NO: M 1530.

# "BALAVINODHINI"

CHILDREN'S FRIEND

# பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்.

ஆசிரியர்:
வரகவி திரு. அ. சுப்பிரமணியபாரதி.

Vol XI } SEPT. 1929 { No. 9



PRINTED AND PUBLISHED
BY
V. RAMASWAMY SASTRULU & SONS
323, Tiruvottiyur High Road
Tondiarpet, MADRAS.

JUN 1930

*N. B:*—The Subscribers are requested to pay subscriptions to our agents only on obtaining our Bonafide receipts.

**All Rights Reserved by the Publishers.**

# பாலவிநோதினி

## CONTENTS—பொருளடக்கம்


| | பக்கம். |
| --- | --- |
| தெய்வ வணக்கம் ... ... | 405 |
| ஹிதோபதேசம் ... ... | 406--409 |
| கடவுளின் செயலைக் கடப்பதற்காகுமா? | 410—416 |
| உடலினை உறுதிசெய் ... ... | 417—422 |
| வான சாஸ்திரக் குறிப்புகள் ... | 423--427 |
| விவேகியே மேன்மை யடைவான் ... | 428—430 |
| பெரியாரின் உபதேசம் ... ... | 431--434 |
| பாம்பு கடிக்கு மருந்து ... ... | 435--436 |
| கிட்டத்து பார்வையும் நீர் ரோகமும் | 437--438 |
| ஓர் அற்புதமான தீர்மானம் ... | 439—440 |
| வெற்றிலையின் குண விசேஷங்கள் ... | 441 |
| விநோத விஷயங்கள் ... ... | 442—443 |
| பெற்றமனம் பித்து பிள்ளைமனங் கல்லு ... ... ... | 444—450 |
| ஓர் அம்மையாரின் தெய்வீக சக்தி ... | 451—452 |


குறிப்பு:—எமது கையொப்பமிட்ட எமது கம்பெனி சீது பெற்றுக்கொண்டு ஏஜண்டுகளிடம் சந்தாத் தொகையைச் செலுத்தக் கோருகிறோம். எமது ரசீது இல்லாமல் போனால் ப்புக்கொள்ளப்படமாட்டாது.

உ

செந்திலாண்டவன் திருவடி துணை

# பாலவிநோதினி

அல்லது

## குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 11 | 1929ளு செப்டம்பர் மாதம் | பகுதி 9

### தெய்வ வணக்கம்

கருத்தே புகுந்து கதிகாட்டுங்
    கண்ணே வருக மெய்ஞ்ஞானக்
கரும்பே வருக கருணைபொழி
    காரே வருக ஆநந்தப்
பெருக்கே வருக யாங்கள் பெறும்
    பேறே வருக மறை சொல்கிளிப்
பிள்ளாய் வருக பிறங்கு தெய்வப்
    பெம்மான் வருக குற மடந்தை
தருக்கே வருக மிடியகற்றும்
    தருவே வருக மன்பதைக் கோர்
தஞ்சே வருக எமை யளிக்கும்
    தாயே வருக பவப் பிணிக்கு
மருந்தே வருக சமரபுரி
    வாழ்வே வருக வருகவே
மறையின் சிரமெய்ப் பொருளான
    வள்ளல் வருக வருகவே.

...க நூலகம்
210778

## ஹிதோபதேசம்

பாலோடு பழம் சேர்ந்தாற் போல் முகமலர்ச்சியோடு இனிய வசனம் சொல்லப்பழகு. இன்னது செய்தால் இன்னது சொன்னால் பின்னே இது விளையும் என அறிந்து செய்யவும் பேசவும் அறிந்துகொள். உறவினர், அயலார், சிநேகர், பகைவர், இழிந்தோர், உயர்ந்தோர் - முதலான யாவரிடமும் காலவேற்றுமையாலும் குணவேற்றுமையாலும் உண்டாகக் கூடிய நன்மை தீமைகளைச் செவ்வனே தெரிந்து கொள்ளமுயலு. அகங்காரம் டம்பம் - வஞ்சகம் பொறாமை - வீண் செய்கை - வீண் பேச்சு - இவைகளுக்கு இடங்கொடாதே. துர்க்குணமுடையவரைக் கனவிலும் நினையாதே. நற்குணமுடையவரை அடுத்துப் பழகு. நற்குணமுடையவரே கண்யமடைவர். அவருடைய பழக்கமே உங்களையும் கண்யப்படுத்தும். பகைவலியும் தன்வலியும் துணைவலியும் கால நிலைமையும் இட நிலைமையும் தெரிந்து கொண்டு காரியத்தை நடத்தத் துணிவு கொள்.

2. "தன்னைக் கொடுத்தாவது தருமத்தைத் தேடவேண்டும்" என்று பெரியார் கூறுகின்ற படியால் விவேகிகள் - தருமத்தைக் கைவிடமாட்டார்கள்.

3. "காலம் போகும் வார்த்தை நிற்கும்" என்று ஒரு பழமொழியுண்டு. ஆகையினால் - எப்போதும் பேசுவதை யோசித்துப் பேச வேண்டும். தீர்மானம்



செய்வதை யோசித்தே தீர்மானம் செய்ய வேண்டும். பதறி ஒன்றையும் சொல்வது கூடாது. அப்படிச் சொல்வது ஆபத்தையும் பழிப்பையும் விளைவிக்கும். உலகமும் அவனைச்சிறிதும் ஆலோசனையில்லாதமூடனென்று இகழும். உலகப் பழிப்புக்கு இடங்கொடுப்பவன் எவனும் மனிதசமூகத்தில் தானும் ஒருவனென நிற்க இடம் பெற மாட்டான்.

(4) "தன் வீட்டு விளக்கென்று முத்தமிட்டால் சுடாது விடாது"—என்று ஒரு பழமொழி வழங்குகிறது. இதன் கருத்தென்ன?—நம்முடைய புத்திரன் நம்முடைய பெண், நம்முடைய மனைவி - நம்முடைய சகோதரன் - என்கிற அபிமானத்தினால் - ஒருவன் அவர்கள் செய்த தீய செய்கைக்குத் தண்டனை விதியாமல் மறைப்பானானால் அது பின்னால் பெருங்கேட்டை விளைவிக்கும் என்பதேயாம். ஆதலால் - அருமை மகன் குற்றவாளியானாலும் அவனைக் கண்டிக்கவோ தண்டிக்கவோ - செய்து அவன் செய்த குற்றத்தைப் பின்னால் அவன் எக்காலத்திலும் செய்யவொட்டாமற் செய்வதே நலம் பயப்பதாகும். இந்தக் கருத்தை— தன் மைந்தனின் தேர்க்காலில் அகப்பட்டு ஒரு பசுங்கன் றிறக்க — அது கொலைக் குற்றமெனச் சினந்து அந்த மைந்தனைக் கொல்லும்படி தண்டனை விதித்த மனுச்சோழன் என்னும் சக்ரவர்த்தியின் சரித்திரம் நன்கு உணர்த்தும்.

(5) பகவானுடைய திருவருளை யடையவே விவேகிகள் எப்போதும் முயற்சி யுடையவரா யிருப்

பார்கள். அவர்கள் அந்தச் செல்வத்தைவிட வேறு எந்தச் செல்வத்தையும் பெரிதாய் எண்ண மாட்டார்கள். அவர்கள் அந்த பகவானைச் சிந்தித்துத் தமக்கு வேறு எந்தச் செல்வமேனும் வேண்டுமென்று வினவுவார்களானால் பகவான் கொடுக்காமலிருக்க மாட்டார். பரம தரித்திர தசையிலிருந்த குசேலர் என்னும் பரம பக்தர்-பகவானிடம் செல்வத்தை விரும்பிச் சென்றபோது அவர்பெருஞ் செல்வமளித்தனரன்றோ? இராவணன்-தனக்கு ஒப்பற்ற வாழ்வை விரும்பியபோது அவனுக்கு ஒப்பற்ற வாழ்வை அளித்தனரன்றோ?-ஆகையினால் பகவான் பக்தன் விரும்பியதை அளிப்பார் என்பது கண்டோம். ஆனால் - குசேலரைப்போல் செல்வம் வந்தடைந்த காலத்தும்-பகவானை மறவாமலும் அகங்காரம்.டம்பம்-அட்டூழியம் முதலிய வற்றிற்கு இடங்கொடாமலும் இருக்கவேண்டும். அப்படியிருப்பவரே இகபர நன்மைகளை அடைதல் கூடும். இராவணனைப்போல்-அகங்காரங்கொண்டு மனம்போனபடி நடக்கத் துணிந்து பகவானை அலக்ஷியம் செய்வது கூடாது. அப்படிச் செய்தால் அழிவுண்டாவது திண்ணம். செல்வம் புத்திமானை நல்லவழிக்குக் கொண்டுவரும். மூடனை அதோகதியில் சேர்க்கும். அல்லாமலும் சில சமயம் அறிவாளியையும் அகங்காரத்துக் குள்ளாக்கிக் கெடுக்கும். இதனாலே தான் பகவானுடைய திருவருளை நாடிய பெரியோர் பொருளை விரும்புவதில்லை. பொருள் அத்தகைய தன்மையுடையது; இக்கருத்



துக் கொண்டுதான் கைகேயி - தன் மைந்தன் பரதனை நோக்கி, "நீ உன் அண்ணன் ஸ்ரீராமனை நல்லவனென்று நினையாதே. செல்வம் எப்படிப்பட்டவனுடைய புத்தியையும் மாற்று மாகையினால் அவன் இராஜ்ய சம்பத்தை அடைவானானால் உன்னைக்கொல்வான். சம்பத்து அப்படி அவனை மயக்கும். அதனாலேயே நான் அவனைக் காட்டுக் கோட்டினேன்" என்று கூறினாள்.

இதனால் நாம் அறிந்து கொள்ளவேண்டியதென்ன?-செல்வத்தைத் தேடவேண்டியது அவசியமாகும். ஆயினும் செல்வம் அடைந்தபோது அடக்கத்தைக் கைவிடாமல் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். செல்வம் - சகடக்கால் போல்வது - என்பதை அடிக்கடி எண்ணவேண்டும். பகவானுடைய திருவருட் செல்வமே நம்மைக் காப்பது-என்பதை மறப்பதே கூடாது-என்னும் இவைகளேயாம்.

---

**பழங்கால நாணயங்கள்:—**

மிகப் பழங்காலத்தில் கள்ளில் நனைந்த புகையிலையும் இறுகிய பால் கட்டிகளும் புல் பாய்களும், உப்பும் நாணயங்களுக்குப் பதிலாக உபயோகப்பட்டு வந்தனவாம். ஸ்ரீபேரன் ஜார்ப் என்பவர், 5000-வருடகாலமாய் உபயோகிக்கப்பட்டு வரும் 40,000-வகையான நாணயங்களைச் சேகரித்துள்ளாராம். அவ்வாறு சேகரிப்பதற்கு 40-வருஷங்கள் சென்றனவாம். அவைகள் யாவற்றையும் அவர் ஓர் அமெரிக்க பாங்கிக்கு 10,000,000 பவுன்களுக்கு விற்று விட்டாராம் பாபிலோனியாவில் 5000 வருஷங்களுக்கு முன் உபயோகிக்கப்பட்ட களிமண்பில்லும், 2700 வருடங்களுக்கு முந்திய நாணயங்களும், 700 ஆண்டுகளுக்கு முந்திய சைனாவில் முதல் முதல் போட்ட காகிதங்களும், தென்னிந்தியாவில் உபயோகித்து வந்த குண்டூசித் தலையளவுள்ள ஒரு பொன் நாணயமும் அடங்கி யுள்ளதாம்.

## கடவுளின் செயலைக் கடப்பதற்காகுமா?

முன்னொரு சமயம் சம்பராசுரன் என்னும் ஓர் அசுரனிருந்தான். அவன் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் பலவிதமான இடையூறுகள் செய்து, தான் என்கிற ஆணவமேலிட்டவனாய்த் தன்னைப்படைத்தவனும் தனக்குப் பெருஞ்செல்வமும் ஆற்றலும் அறிவும் அளித்தவனும் ஒருவன் உண்டென்பதை-மறந்து அதாவது கடவுள் ஒருவருண்டென்பதை மறந்து இறுமாந்திருந்தான். தேவர்களும் முனிவர்களும் இவனுடைய அகந்தையை அடக்கித் தங்களுடைய வாழ்வைத் தங்களுக்கு அளிக்கவேண்டுமென்று பகவானை அல்லும் பகலும் துதித்தவண்ணமிருந்தார்கள்.

இப்படியிருக்கையில் சிவபெருமானுடைய நெற்றிக்கண்ணுக்கிரையாய்ச் சாம்பலான மன்மதன் ஸ்ரீ கிருஷ்ணபகவானுக்கு அதாவது ஸ்ரீ ருக்மிணிதேவிக்குப் புதல்வனாகத் துவாரகையில் அவதாரஞ் செய்தான். அவனுக்குப் **பிரத்யும்னன்** என்று பெரியவர்கள் பெயரிட்டார்கள்.

மன்மதன் அழிந்தவுடன் ஸ்ரீ ரதிதேவி பூலோகத்தில் மானிடமாதாக அவதரித்து மாயாவதி என்கிற பெயருடன் விளங்கினாள். சம்பராசுரன் ஒரு சமயம் கானகத்தில் தன் பரிஜனங்களோடு வேட்டையாடினான். அங்கே ஓரிடத்தில் தன் தோழிகளுடன் வன விநோதங்காண வந்த மாயாவதியை அசுரன் கண்டான். கண்டதும் அவள் மேல் ஆசை கொண்டு அவளைச் சிறை செய்து வந்து தன் மாளிகையில் ஒருபுறத்தில் வைத்திருந்தான்; தன்னை மணந்து கொள்ளும்படி அவ்வணங்கை மன்றாடினான். மாயாவதி "மானுடமாது அசுரனொருவனை மணப்பது தகுதியல்ல. ஆதலால் நான் அதற்குடன்படேன்" என்று பலவிதத்தில் நீதிகூறி மறுத்தாள். அசுரன் மாயாவதியை நயத்திலும் பயத்திலும் தன் எண்ணத்திற்கு இணங்கும்படிசெய்ய முயற்சி செய்தான். அவனுடைய எந்த முயற்சியும் பயன்படவில்லை.

இப்படியிருக்கையில் நாரதர் அவனுடைய அரண்மனையில் பிரவேசித்து அவனைக் கண்டு, "அசுரேச, நீ உன்னைவிடப் பலசாலியில்லையென்றும் உன்னை வெல்பவர் இல்லையென்றும் உன்னை எதிர்த்துச் சமர் செய்யும் பகைவரெவருமில்லையென்றும் எண்ணி இறுமாந்திருக்கிறாய்! அது தவறு. உன்னைக் கொல்ல ஒரு பகைவன் உதித்திருக்கிறான்" என்றார்.

அசுரன் அவ்வுரை கேட்டதும் சினங்கொண்டு "ஆகா எனக்கொருபகைவனும் இந்த உலகத்திலிருக்கிறானோ?-இந்திரனும் நடுங்கி ஒடுங்கிப் பதுங்கிக் கலங்கும்படி இறைமை நடத்தும் என்னை வெல்பவனும் இருக்கிறானோ? அவனாரவன்? என்றுகேட்டான். நாரதர் "வேந்தே, வீரம்பேசாதே. உன்னைவெல்பவன் த்வாரகையில் ஸ்ரீ கிருஷ்ணமூர்த்திக்குப் புதல்வனாக ஸ்ரீ ருக்மிணிதேவியாரிடம் அவதரித்திருக்கிறான். இன்னும் அவனுக்குச் சிசுப்பிராயம் மாறவில்லை" என்றார்.

சம்பராசுரன் நகைத்து, "என்ன விநோதமிது: ஒருமானிடச்சிசுவா எனக்குப்பகைவன்! நன்று! நன்று! கேலிபேசுகின்றீர்?" என வியந்து, "இப்போதே என் பகைவனைக் கொல்கிறேன்! த்வாரகைக்கு சென்று அந்தச் சிசுவை என்மாயையினாலே கவர்ந்து எடுத்துக்கடலில் எறிந்துவிட்டுத் திரும்புகிறேன்! பகைவன் என்று ஏற்பட்டவனை அற்பனென்று அலட்சியமாய் எண்ணுவது கூடாது, நெருப்பு சிறுபொறியானாலும் பெரியவீட்டையும் கொளுத்துமன்றோ? ஸ்வாமி வந்தனம்! போய்வாருங்கள். தாங்கள் தயைகூர்ந்து என் பகைவனை எனக்குக் காட்டியதற்காக நான் நன்றியறிதலுடையவனாயிருப்பேன்' என்று உபசாரவார்த்தைகள் கூறி அவரை அனுப்பிவிட்டுத் துவாரகை சென்றான்.

துவாரகாபுரி ஸ்ரீகிருஷ்ணபரமாத்மாவின் ஆளுகையிலிருப்பதாகையினால் அதனுட் பிரவேசிப்பது கஷ்டமாயிருந்தது. ஆகையினால் அசுரன் தன் மாயையினால் சொரூப மாறி ஸ்ரீருக்மிணியின் பிரசவ அறையில் பிரவேசித்து அங்கே சிசு ரூபமாயிருந்த ப்ரத்யும்னன் என்னும் தன்பகைவனைக் கவர்ந்து எடுத்துக் கொண்டு வெளிவந்து அவனைப் பார்த்தான். அக்குழந்தையின் திவ்ய சுந்தர சொரூபம் அவன் கண்களையும் மனத்தையும் கவர்ந்தபடியால் அதனைக் கடலிலெறிந்து கொல்ல மனமில்லாமல் சிறிது நேரம் ஆலோசித்தபடி யிருந்தான். பின், "இவனே நமக்குப்பகைவன் இவனிடம் இரக்கம்பாராட்டுவது நெருப்பை யெடுத்து மடியில் கட்டிக்கொள்வதற்கும் யமனை வெற்றிலை பாக்கு வைத்தழைப்பதற்கும் சமானமாகுமாதலால் இவனைக்கொல்வதே நமக்கு நலந்தருவதாகும்" எனத் தீர்மானித்து வீசி அச்சிசுவைக்கடலிலெறிந்து விட்டுத் தன் நகர்திரும்பிப் பகையை ஒழித்துவிட்டோமென்று மகிழ்ந்து உற்சவங் கொண்டாடினான்.



இப்படி யிருக்கையில்—அசுரச் செம்படவர்கள் கடலில் வலைவீசி மீன் பிடித்தார்கள். அவர்கள் வலையில் ஒரு பெரிய மீன் அகப்பட்டது. அந்த மீன் அதுவரையில் அவர்களி லொருவரும் பார்த்திராததாயும் அதிசயிக்கத் தக்கதாயு மிருந்தது. அது கண்டு அவர்கள் வியந்து அதனைத் தங்கள் அரசனாகிய சம்பராசுரனிடம் கொண்டு போய்க் காட்டித் தக்க பரிசு பெற்றுச் சென்றார்கள். அசுரேசன் அந்த மீனைச்சமையல் அறைக்கு அனுப்பினான். சமைய லறையில் சமையற்காரர்கள் அந்த மீனை அறுத்தார்கள். அதன் வயிற்றில் ஒரு மானிடக் குழந்தை இருக்கக் கண்டு அவர்கள் வியப்புற்றுத் தங்கள் தலைவனாகிய சம்பரனிடம் தெரிவிப்ப தென்று தீர்மானித்தார்கள். அந்தச் சமைய லறையிலுள்ள வேலைக்காரிகளில் பல மானிட ஸ்திரீகளு மிருந்தனர். அவர்களில் ஒருத்தி முன் வந்து "இந்தக் குழந்தை மானிடக்குழந்தை! இதை நம்முடைய அரசன் கண்டால் விடமாட்டான். கட்டாயம் கொன்று விடுவான். இந்தக் குழந்தையின் அழகு கண்களைக் கவர்கின்றது. இதனை நான் ஒருவருக்கும் தெரியாமல் வளர்க்கிறேன். இல்லாவிட்டால் தனி அரண்மனையி லிருக்கும் மாயாவதியினிடம் கொடுக்கிறேன். அவள் வளர்க்கட்டும்" என்று கூறி

அதைப்பற்றி அரசனுக்குத் தெரிவியா திருக்கும்படி வேண்டிக் கொண்டாள். சமையற்காரர்கள் அவளுடைய வேண்டுகோளுக் கிணங்கி அக் குழந்தையை அவளிடம் கொடுத்துவிட்டுத் தங்கள் அலுவலைக் கவனிக்கலாயினர்.

அந்த வேலைக்காரி பின் அக் குழந்தையை எடுத்துக்கொண்டு போய் மாயாவதியினிடம் கொடுத்தாள். மாயாவதி அக் குழந்தையினுடைய அழகில் ஈடுபட்டுத் தானீன்ற சிசுவைப்போல் அதனிடம் அன்பு பாராட்டி அதனைப் பார்த்து வந்தாள். பின் ஒரு நாள்- "ஆகா, இந்தக் குழந்தையை நாம் எப்படி அசுரனுக்குத் தெரியாமல் வளர்ப்பது. இது சாத்தியமா? ஐயோ இது என்ன விதி. இக் குழந்தையை நானேன் பெற்றுக்கொண்டு வளர்ப்பதாக 'உடன்பட்டேன். அசுரன் கண்டால் இதனைக் கொல்வதுமன்றி நம்மையுமல்லவா கொல்வான். ஈசா! பரந்தாமா என்று கிருஷ்ண பரமாத்மாவைத் தியானித்தாள்.

அச்சமயம் அங்கே நாரத முனிவர் தோன்றி- "மாயாவதி வருந்தாதே இச் சிசு யார் தெரியுமா?— ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவினுடைய திருக்குமாரன், ப்ரத்யும்னன். இவனை அசுரேசன் தன் பகைவனெனத் தெரிந்து கொண்டான். துவாரகை சென்று திருடிக் கடலில் எறிந்து விட்டு மகிழ்ந்து உற்சவங் கொண்டாடினான். இவனைக் கடலில் ஒரு மீன் விழுங்கியது. பகவானுடைய திருவருளால் இவன் அந்த மீனின் வயிற்றில் உயிருடனிருந்தான். அந்த மீனே செம்படவர் வலையிலகப்பட்டது. இவனைப் பற்றிய இன்னொரு இரகஸ்ய முண்டு. கேள்—



இவன் தான் உன் கணவன் மன்மதன் சிவபெருமானுடைய நெற்றிக் கண்ணிற் கிரையான பின் இவன் கிருஷ்ணமூர்த்திக்குப் புதலவனகப் பிறந்தான். இந்த அவதாரம் சம்பராசுர ஸம்ஹாரத்திற்காகவே ஏற்பட்டது. நீயே ரதி, ஆதலால் கவலைப்படாதே! இவனை அசுரன்காணும்போது இவன் பெரியவனாய் விடுவான். உடனே அவனுக்கும் இவனுக்கும் போர் நடக்கும். போரில் இந்தப் பிரத்யும்னன் அசுரனை ஸம்ஹரிப்பான். பின் உனக்கும் அவனுக்கும் துவாரகையில் திருமணம் நிறைவேறும். நீ அஞ்சாதே:-என்று கூறி மறைந்தார். பின் மாயாவதி கவலையற்றுக் குழந்தையை வெகு ஜாக்ரதையாய்ப் பாதுகாத்து வந்தாள்.

அப்பால் ஒருநாள் அசுரன் மாயாவதியின் மாளிகை வந்து தன்னை மணந்து கொள்ளும்படி மாயாவதியைப் பல விதத்திலும் மன்றடி வேண்டினான். மாயாவதி மறுத்தாள். அப்போது சிசுவடிவத்துடனிருந்த ப்ரத்யும்னனை, அவன் கண்டான்; கண்டதும் 'இம் மானிடக் குழந்தை இங்கெப்படி வந்தது? இது யார் குழந்தை?-சொல்" எனச்சினந்து மாயாவதியை மிரட்டினான். மாயாவதி நடுங்கிப் பயந்து பகவானைத் துதித்தாள். துதித்துக் கொண்டிருக்கும் போது ப்ரத்யும்னன் அசுரன் அதிசயிக்கும்படி வாலிபனானான். பின் இருவருக்கும் போர் நடந்தது. போரில-ப்ரத்யும்னன் சம்பராசுரனை ஸம்ஹரித்து வெற்றிப் பிரதாபத்-

துடன் விளங்கினான். உடனே கிருஷ்ண பரமாத்மாவின் திருவருளால்-அவ்விடம் ஓர் விமானந் தோன்றியது. அதில் மாயாவதியும் ப்ரத்யும்னனும் ஏறிக் கொண்டனர். பின் அவ்விமானம் ஆகாய வழியே துவாரகை போய்க் கிருஷ்ண பகவானுடைய ஸந்நிதியில் இறங்கியது. அங்கே நாரத முனிவரும் விஜயமானார். பிறகு உலகம் புகழ்ந்து மகிழ்ந்து போற்றித் துதிக்க ப்ரத்யும்னனுக்கும் மாயாவதிக்கும் விவாகம் நடந்தேறியது.

இச்சமயம் ஜனங்கள் "ஈசுவர நியமனத்தை யாரால் மாற்ற முடியும்? பகவான் துஷ்ட நிக்ரஹ சிஷ்ட பரிபாலனம் செய்ய அவதரிப்பவரல்லவா? துஷ்டனுடைய பராக்ரமம் ஈசுவரனுடைய பராக்ரமத்திற்கு முன் நிற்குமா?-" என்று பேசிக்கொண்டு பகவானுடைய புகழைத் துதித்து அவரை வணங்கி மகிழ்ந்தார்கள்.

---

## தூதுவளை.

தூதுவளையானது கபத்தை நீக்குந் தன்மையுள்ளது. இதைக் கஷாயமிட்டு சுவாசகாசம், இருமலாகிய ரோகங்களுக்குக் கொடுக்கலாம். இலையைத் துவயல்செய்து கொடுப்பதுமுண்டு. இதனால் தாதுப்பலமுண்டாம். கபம், மந்தம், இருமல், இளைப்பு, கிரிதோஷதொந்தம் தீரும். இதன் இலையால் சிலேட்டுமம், கர்ணசூலை, அக்கினி மாந்தம், உட்குத்து, சொறிவு, மேலுளைவு தீரும். பூவினால் தேகபுஷ்டி, தாதுவிருத்தி, சரீரபலம் அழகு உண்டாம். காயினால் கபரோகம் அரோசகம், பைத்தியம், மலபந்தம், இரத்தாசயவாய்வு, பித்தவாதம் தீரும். பழத்தினால் க்ஷயம், சலதோஷம், மார்புச்சளி தீரும், தூதுவளம் பழநெய் க்ஷயரோகங்களுக்கு தக்க அவுடதம். வேரும் கொடியும் சுவாச முதலிய சேடரோகங்கள், பலநோய் இவைகளைப் போக்கும்.

(வி—ன்.)

## உடலினை உறுதிசெய்

(மாயக்கூத்தன் எழுதியது)

தமிழ் நாட்டிலே தற்காலத்திலே மிகச் சிறந்த கவியாக விளங்கியவர் ஸ்ரீமான் ஸி. சுப்பிரமணிய பாரதியார் ஆவர்-அவர் சிறு குழந்தைகளுக்கு உதவுமாறு தற்காலக் கொள்கைகளை உட்கொண்ட புதிய ஆத்திசூடி ஒன்று இயற்றியுள்ளார். தற்காலத்து இந்தியர் மிகப் பயந்த சுபாவமுள்ளவர்களாயிருக்கின்றனர்; அவ்வாறு இருப்பது சரியன்று; அச்சத்தைத் தவிர்த்தல்வேண்டும். அஞ்சா நெஞ்சம் படைத்தல் வேண்டும்.-என்று அவர் அந்த ஆத்திசூடியிலே கூறியுள்ளார். 'ஆண்மை தவறேல்' என்பது 'ஆ' என்னும் எழுத்தாலே துவக்கப்படும் புத்திமதியாகும். இவ்வாறு உயிர், உயிர்மெய்யெழுத்துகளை முறையிலே முதலெழுத்துகளாக அமைத்துக் கூறிய ஆத்திசூடியிலே 'உடலினை உறுதிசெய்' என்பது ஒன்று.

ஒரு சிலர் வாய்ப்பேச்சாக வேதாந்தம் பேசித் தமது உடல்களைப் பேணிப் போஷித்து உறுதிப் படுத்தாது இருப்பதற்குக் காரணங்கள் கூறுவர்; அவர்கள் தங்கள் உடல்களைக் கவனியாமல் இருப்பது ஒரு பாபகாரியம் ஆகும் என்பதை உணர்வதில்லை. வேறு சிலர், யோகம் என்றும் தபம் என்றும் உடலை வருத்தித் தம்மையே இம்சித்துக் கொள்வர்; "இவ்வாறு தவம் செய்தல் வேண்டியதில்லை. கடவுளைக் கோயில்களிலே

கண்டு வணங்கிப் பூசித்துச் சுகமாக வாழலாம்" என்று திருமங்கை மன்னன் என்னும் ஆழ்வார் பாடியுள்ளார். அந்தப் பாட்டு வருமாறு:

ஊன்வாட உண்ணாது உயிர் காவலிட்டு
உடலில் பிரியாப் புலனைந்தும் நொந்து
தாம்வாட வாடத்தவம் செய்ய வேண்டா!
தமதா இமையோர் உலகு ஆளகிற்பீர்!
கானாட மஞ்ஞைக் கணமாட மாடே
கயலாடு கானீர்ப் பழனம் புடைபோய்த்
தேனாட மாடக் கொடியாடு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்று சேர்மின்களே.

பின்னும் அந்த ஆழ்வார்,

காயோடு நீடுகனி யுண்டு, வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம் ஐந்து
தீயோடு நின்று தவஞ்செய்ய வேண்டா!
திருமார்பனைச் சிந்தையுள் வைத்து மென்பீர்!
வாயோது வேதம் மலிகின்ற தொல்சீர்!
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த
தீயோங்க வோங்கப் புகழோங்கு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்று சேர்மின்களே

என்று பாடியுள்ளார்.

எனவே, மறுமைநலம் வேண்டும் என்றாலும் உடலை வருத்த வேண்டுவதில்லை; திருமறுமார்பனைச் சிந்தையுள்ளே வைத்தாற் போதும்.

இவ்வாறு தமது சிந்தையிலே இடைவீடு ஒன்றும் இன்றி திருமறுமார்பனைப் பள்ளிகொள்ளச்செய்த



பெரியார் விஷ்ணு சித்தர் என்று ஒருவர் இருந்தார். அவரே ஆழ்வார்கள் பதின்மரிலும் பெரியார் என்பது தோன்றப் பெரியாழ்வார் என்று அழைக்கப்படுவர். அவர், "பொன்னைக் கொண்டு உறைகல்மீதே நிறம் எழ உறைத்தாற்போல், உன்னைக்கொண்டு என் நாவகம்பால் மாற்றின்றி உறைத்துக்கொண்டேன்" என்றும் "உன்னைக்கொண்டு என்னுள் வைத்தேன்" என்றும் கடவுளைக் குறித்துப் பாடுவர். அவர் சொல்வது: நம்முடைய உடம்புகள் அழுக்குடம்புகள்; வாய்கள் எச்சில் வாய்கள், நாமும் ஊத்தைக்குழி போன்று உள்ளோம்; ஆனாலும் இந்த ஊத்தைக்குழிகளுக்குக் கடவுளின் திருநாமங்களை இட்டு அழைத்தால் அவை அமுதம் பாய்ந்தனவாகும். இவ்வெச்சில் வாய்களால் ஈசனைத் துதித்தால் அவை அமுத ஆற்றுப் பெருக்குகள் ஆகின்றன; இவ்வழுக்கு உடம்புகளுள்ளே

மார்வம் என்பதோர் கோயில் அமைத்து
மாதவன் என்னும் தெய்வத்தை நாட்டி
ஆர்வம் என்பதோர் பூவிட வல்லார்க்கு
அரவ தண்டத்தில் உய்தலு மாமே.

ஆகவே, நாம் நமக்குக் கிடைத்த உடல்களைக் கடவுள் உறையும் திருக்கோயில்களாக ஆக்கி அவற்றைக் கடவுள் உறைவதற்கான தூயநிலை பெறும்படி செய்தல் வேண்டும். இன்றேல் நம்முடைய உடல்கள் வருந்திக் கேடுறும்படி செய்வதற்கு ஒப்பு ஆகும். எனவே நாம் உடலை நன்குபேணி உறுதி செய்யவேண்டும். செய்யும் போது நமது உடல் என்ற உணர்ச்சிமட்டும் தவிர்த்து

கடவுளின் கோயில் என்ற தூய உணர்ச்சியோடு உடலைப் பாதுகாத்தல் வேண்டும். நோய்களை நம்முடலை விட்டுச்செல்லும்படி செய்தல் வேண்டும். இந்த உயர்ந்த உண்மைகளை யெல்லாம் பெரியாழ்வார் "பட்டினம் காப்பு" என்னும் பத்துப் பாசுரங்களாலே நன்கு விளக்கி யுள்ளார். அவர் நோய்களைப் பார்த்துச் சொல்லுகின்றார்:

நெய்க் குடத்தைப்பற்றி ஏறும் எறும்பு
　　கள் போல் நிரந்து எங்கும்
கைக்கொண்டு நிற்கின்ற நோய்காள்
　　காலம்பெற உய்யப் போமின்
மெய்க்கொண்டு வந்து புகுந்து
　　வேதப் பிரானார் கிடந்தார்
பைக்கொண்ட பாம்பணை யோடும்
　　பண்டன்று பட்டினம் காப்பே

அதாவது: வேதங்களாலே போற்றப்படும் பிரான் என் மெய்யையே கோயிலாகக்கொண்டு என்னுளே புகுந்து 'அரவத்து அமளியினோடும் அழகிய பாற் கடலோடும் அரவிந்தப் பாவையும் தானுமாய்' என் அகத்திலே பரவைத்திரை பலமோதப் பள்ளி கொண்டு கிடக்கின்றார். ஆதலால் நீங்கள் நாசமடையாமல் இருக்க வேண்டுமானால் இங்கிருந்து வேறிடம் செல்லுங்கள் என்று ஆழ்வார் பாடுகின்றார்.

ஆனால், பழைய வினைகளின் பயனாக உடலை வருத்தும் நோய்கள் பல நமக்கு வருமே என்று நாம்



எண்ணக்கூடும். எல்லாம் வல்ல கடவுளை நமது மனக் கோயிலிலே அமைத்து நம்முடலைப் பிரானாரை இடமாகக்கருதிப் பாதுகாக்கவே "சித்திரகுத்தன் எழுத்தால் தென் புலக்கோன் பொறி ஒற்றி வைத்த இலச்சினைகள் எல்லாம் மாறிவிடும்." "சிங்கப்பிரான் சேரும் திருக்கோயிலிலே மங்கிய வல்வினை நோய்களாலே புகுதல் கூடுமோ?

இவ்வாறு பலவிதமாக நோய்களுக்கு எச்சரிக்கை செய்து, தம்முடைய உடலாகிய கோயிலிலே சேர்ந்த பக்தர்க்கமுதினைக்காக வேண்டி லோகபாலகர் எண்மரையும் பறவை யரசனையும் ஆழி, சங்கு, வாள், வில், தண்டு ஆகிய பஞ்சாயுதங்களையும் ஏவுவார் விஷ்ணுசித்தர் என்னும் பெரியார்.

அவர் உடலுக்கும் நோய்களுக்கும் சொல்லிய ஒரு உபமானம் நன்கு கவனிக்கத் தக்கது. நோய்கள் வலிவன், குறும்பர் என்பர். உடலை "மாணிக்கப் பண்டாரம்" என்பர். இவ்வுபமானத்தாலே விளங்கும் கருத்தை நாம் எல்லோரும் மனதிலே கொள்ள வேண்டும். கடவுளை ஒரு மாணிக்கத்துக்கு ஒப்பாகக் கூறலாமாயின், நம்முடைய உடல்களை அம்மாணிக்கத்தை இட்டு வைக்கும் அரிய பொக்கிஷப் பரணியாகக் கொள்ளல் வேண்டும். இப்பொக்கிஷப் பரணி பிறரால் எளிதிலே கவரப்படாமலும் உடைத்துக்கேடுறுத்தி உள்ளுள்ள மாணிக்கத்தைப் பறிகொடுக்காமலும் காப்பது அந்த மாணிக்கத்தைப்

பெற்ற நம்முடைய கடமை யன்றோ? ஆகவே நம்மில் ஒவ்வொருவரும் உடலினை உறுதி செய்து அதனை ஒரு மாணிக்கப் பண்டாரமாக்குதல் வேண்டும். "நாம் வேறு, உடல் வேறு. இந்த உடலுக்கும் நமக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை; அதைக் கேடுறுத்தினால் ஒரு கெடுதியும் வராது என்று போலி வேதாந்தம் பேசுவது பிசகு; வேதாந்தத்தின் உண்மை அது அன்று. ஆனந்தத்திற்கு அளவை கூறும் ஓர் உபநிஷத வாக்கியம் "மானுடனின் பூர்ணமான ஆனந்தமானது அவன் யௌவனத்தோடும் உடல் வன்மையோடும் இருந்தால் மட்டுமே ஏற்படும்" என்று குறித்துச் செல்கின்றது.

ஆதலின் ஆரோக்யத்தைத் தருவனவாகிய தூய தேகப் பயிற்சிகளிலே தினந்தோறும் பழகி, ஸ்நானம் புதிய உடைகளை அணிதல், கை கால்களை அடிக்கடி கழுவுதல் முதலிய சுகாதார வழிகளை மேற்கொண்டு, நம்முள் இறைவன் எப்போதும் கோயில் கொண்டு இருக்கின்றான் என்ற உணர்ச்சியோடு நம்முடைய உடல்களை யாதொரு அசுத்தமும் சேர ஒட்டாமல் காத்து நோயின்றியும் அழியாத உடல் வன்மையோடும் வாழ்வோமாக.

---

கோழைத்தனம் ஒரு நல்ல குணமாகாது. கோழைத்தனம் நீங்க நாடோறும் தைரியசாலியுடன் பழகி வரவேண்டும்.

## வான சாஸ்திரக் குறிப்புகள்

### (வே. நாராயணன் எழுதியது)

வான மண்டலத்திலே கிழக்கிலிருந்து சூரியன் வெளிக்கிளம்புவதாக நமக்குத் தோற்றுகிறதல்லவா? அந்த வேளையைச் சூரியோதய காலம் என்றும் காலைப் பொழுது என்றும் சொல்கிறோம். பிறகு மெல்ல மெல்ல சூரியன் வான உச்சியை அடைந்து மேற்புறமாக மெல்லமெல்லத் தாழ்ந்து இறுதியில் மேல் வானத்தின் கீழே மறைகிறான். சூரியன் வான உச்சியிலே இருக்கும் வேளையை மத்தியான்னம் அல்லது நடுப்பகல் என்றும் சூரியாஸ்தமன காலத்தை சாயங்காலம் அல்லது மாலை என்றும் சொல்கிறோம். மத்தியிலுள்ளவாறு உள்ள காலம் சுமார் பன்னிரண்டு மணி நேரம் ஆகின்றது. இந்தப் பொழுதை பகல் என்று சொல்கிறோம். பிறகு எங்கும் இருள் சூழ்ந்து கொள்கின்றது. சிற்சில நாட்களிலே சந்திரன் ஆகாயத்தில் தோன்றுகிறான். ஆனால் அவன் சூரியனைப்போல ஒரு காலத்திலே முழுபிம்பத்தோடு உதயமாவதில்லை. நாளுக்கு நாள் அவனுடைய ஒளிவட்டம் அளவிலேயும் வடிவிலேயும் மாறுதல் அடைகின்றது; நாளுக்கு நாள் அவனுடைய உதயகாலம், அதாவது அவன் கீழ் வானத்திலே தோன்றும் காலம் மாறுபடுகின்றது.

நாம் வானத்தை உற்றுநோக்கத்தொடங்குவோம். இன்று பௌர்ணமி என்று வைத்துக்கொள்வோம்.

இன்று சூரியன் மேற்றிசையிலே மறையும் காலத்திலே கீழ்த்திசையிலே நோக்கினால், அங்கு சந்திரன் முழுவட்டமாகத் தோன்றிக் கீழ்வானத்திலே எழுவது காணப்படும். இவ்வாறு காணப்படும் காட்சி நமது பூர்வீகர் கதைக்கு ஒரு விசித்திரமான செயலாகக் காணப்பட்டது. ஏனெனில் சூரிய பிம்பம் போன்ற ஒளியும் உஷ்ணமும் தருவதன்று சந்திரபிம்பம்; உதய ஞாயிறு கண்ணுக்கு அழகாகக் காணப்படுவது என்றாலும் அது சற்று நேரத்துக்கெல்லாம் ஒளிமிகுந்து பார்ப்போர் கண்களைக் கூசச் செய்வதோடு வெய்யிலின் கொடுமையால் தாபத்தை விளைக்கின்றது. சந்திரபிம்பம் அப்படியன்று. அதன் ஒளியிலே வெப்பம் என்பதே யில்லை. தண்மை மிகுந்துள்ள ஒளி என்றே அதனைச் சொல்லலாம். தன் ஒளியாகிய நிலவு காண்போர் மனதிலே இன்பத்தை எழச் செய்கின்றது-பௌர்ணமி என்பது பூர்ண சந்திரன் இரவிலே தோன்றும் படியான தினம். சந்திரன் தோன்றும்போது அருகிலும் வான வெளி எங்குமே பலபல நக்ஷத்திரங்கள் வானத்திலே தோன்றுகின்றன. இவை சூரிய ஒளியிலே ஒளி மங்கித் தோன்றாதன ஆகின்றன. எனவே, சந்திரனை நக்ஷத்திரங்களுக்கு அதிபதி என்பர்.

சந்திரன் வானிலே செல்வதாகத் தோன்றும் வழியைச் சற்றுக் கவனிப்போம். பௌர்ணமியாகிய இன்று அவன் ஒரு நக்ஷத்திரத்தின் பக்கல் தோன்றுகின்றான். நாளையதினம் அவன் ஒளிவட்டம் முழுவட்டமாக இல்லாமல் சற்றுக் கோணிச் சுருங்கிய வட்டமாகத் தோன்றுகின்றான்; மேலும் அன்று அவன் சாயங்காலத்திலேயே வானத்தில் எழுவதில்லை. சற்றுத் தாமதப்படுகின்றான். வானத்திலே தோன்றும் போது நேற்றுத் தோன்றிய நக்ஷத்திரத்தின் பக்கவிலே தோன்றுவதில்லை சற்று விலகி வேறொரு நக்ஷத்திரத்தின் பக்கலில் தோன்றுகிறான்.



சந்திரன் இவ்வாறு நாளுக்கு நாள் தாமதப்பட்டுக் கீழ்வானத்திலே தோன்றுகின்றான். அவனுடைய ஒளிவட்டம் நாளுக்குநாள் பெரும்பாலும் ஒளிதராது கோணலாகிக் குறுகிப்போகின்றது. இறுதியில் ஒருநாள் இரவு சந்திரன் எழுவதே யில்லை. அன்று அவனுடைய ஒளிவட்டமும் இல்லை என்னும் படியாகின்றது. அந்த தினத்தை அமாவாசை என்போம். இது பௌர்ணமிக்கு அப்புறம் சுமார் பதினைந்து நாட்களிலே வருவது. இதற்கு இடையிலே உள்ள நாட்களை முதல் நாள், இரண்டாம் நாள், மூன்றாம் நாள், நான்காம் நாள், ஐந்தாம் நாள், ஆறாம நாள், ஏழாம் நாள், எட்டாம் நாள், ஒன்பதாம் நாள், பத்தாம் நாள், பதினோராம் நாள், பன்னிரண்டாம் நாள், பதின்மூன்றாம் நாள், பதினான்காம் நாள், என்ற பொருள் தரும். பிரதமை துவிதியை, த்ரிதியை, சதுர்த்தி, பஞ்சமி, ஷஷ்டி, ஸப்தமி, அஷ்டமி, நவமி, தசமி, ஏகாதசி, த்வாதசி, த்ரயோதசி, சதுர்த்தசி, என்னும் சொற்களை இட்டு வழங்குகிறோம்.

இவ்வாறே அமாவாசைக்கு அப்புறம் மறுபடி பௌர்ணமி வருவதற்குப் பதினைந்து நாட்கள் ஆகின்

210778
சென்னை 600 008

றன. அவற்றிற்கும் இவ்வாறே பெயர்கள் இடப்படும். அமாவாசைக் கப்புறம் சூரியோதய காலத்திற்கு முன் சந்திரன் சிறிது சிறிதாக வளர்ந்து தோன்றுகிறான். அவன் உதயமாகும் காலமும் சற்றுச்சற்றாக முன் நிகழ்கின்றது.

பௌர்ணமி முதல் அமாவாசை வரையில் இரவு காலமாகவும் அமாவாசை முதல் பௌர்ணமி வரையில் நிலாக் காலமாகவும் இரவு விளங்கும் என்பது மேலே கூறியவற்றால் தெளிவாகும். முன் நிலாக் காலத்தைச் சுக்லபக்ஷம் என்றும் பின் நிலாக் காலத்தைக் கிருஷ்ண பக்ஷம் என்றும் கூறுவர். வட நாட்டிலுள்ளோர் சிலர் மாதத்தைப் பௌர்ணமி முதல் பௌர்ணமி வரை கணக்கிடுவர். அவர் அந்த அந்த மாதத்தை அந்த அந்தப் பௌர்ணமியிலே சந்திரன் எந்த எந்த நக்ஷத்திரத்தின் பக்கலில் விளங்குகிறானோ அந்த அந்த நக்ஷத்திரத்தின் பெயரை இட்டு வழங்குவர்; தெலுங்கர் முதலிய வேறு சிலர் அமாவாசை முதற்கொண்டு மாதத்தைக் கணக்கிடுவர். அவரும் இடையிலே பௌர்ணமியைக் கொண்டு மாதத்திற்குப் பெயரளிப்பர். இவ்வாறு சூரியனுடைய உதயங்களாலே தினங்கள் ஏற்படினும் சந்திரனுடைய பிம்ப அளவு, உதயகாலம் இவைகளாலே சுமார் முப்பது நாட்களைக் கொண்ட மாதம் வழங்கப்படுகின்றது. சந்திரனாலே இவ்வாறு மாதம் பக்ஷம் திதி என்ற மாறுபாடுகள் ஏற்பட்டதை இதுவரையில் குறிப்பிட்டோம். சந்திரன் நாள்தோறும்



ஒரு நக்ஷத்திரத்திற்கோ ஒரு நக்ஷத்திரக் குவியலுக்கோ பக்கலிலே காணப்படுகிறான் என்பதை மேலே குறித்தோ மல்லவா? அவன் மறுபடி ஒரு நக்ஷத்திரத்தின் பக்கல் வருவதற்குச் சுமார் இருபத்தேழு நாட்களாகின்றன. ஒவ்வொரு நாளும் அவன் எந்த நக்ஷத்திரத்திற்குப் பக்கலிலே தோன்றுகின்றானோ அதை அன்றைக்கு நக்ஷத்திரம் என்போம். எனவே முக்கியமான நக்ஷத்திரங்கள் சந்திரனுடைய வழியிலே காணப்படுவனவற்றை இருபத்தேழு பகுதிகளாகப் பிரித்து அவைகளுக்கு அவைகளின் தோற்றத்தைக் கொண்டு அசுவினி பரணி கார்த்திகை முதலிய இருபத்தேழு பெயர்களை இட்டுள்ளார்கள் நமது முன்னோர்கள். இந்த இருபத்தேழு நக்ஷத்திரங்களையும் சந்திரனுடைய மனைவிகளாகப் புராணக்காரர்கள் கூறுவர். சந்திரன் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நக்ஷத்திரத்தோடு தோன்றுவதால் அவற்றிற்கு நாட்கள் என்ற பெயரும் வந்தது; சந்திரனுடைய பெருமையை எடுத்துக்கூறும் வில்லிபுத்தூராழ்வார் என்றகவி பின்வருமாறு பாடியிருப்பதை இங்கு எடுத்து எழுதுவோம்.

பொருந்த வானுறை நாள்களை
நாடோறும் புணர் வோன்
அருந்த வானவர்க்கு ஆரமுது
அன்புடன் அளிப்போன்
திருந்த வானவர்க் கரியவன்
செஞ்சடை முடிமேல்
இருந்த வானவன் பெருமையை
யார் கொலோ விசைப்பார்.

# விவேகியே மேன்மை யடைவான்.

ஒரு பட்டினத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் நல்ல நீதிமானா யிருந்தான். குடிகள் அவனிடம் தெய்வ விசுவாசம் பாராட்டி வந்தனர். அவனும் குடிகளுக்கு நேரும் குறைகளைத் தனக்கு நேர்ந்ததாக எண்ணி ஆதரித்து வந்தான்.

இப்படிப்பட்ட அரசனுக்குப் புத்ரபாக்ய மில்லாமற் போயிற்று. ஆகவே அவன் தனக்குப்பின் தன் அரசை யேற்றுப் பரிபாலிக்க ஒரு பிள்ளை யில்லாமற் போனதை எண்ணி அடிக்கடி வருந்துவான். இப்படியிருக்கையில், ஒரு நாள் அவ்வரசனை வளர்த்த செவிலித்தாய் அரசனுக்குத் தான் செய்த சில அருமையான பணியாரங்களைக் கொண்டு வந்து கொடுத்தாள். அப்பொழுது அந்தச் செவிலித்தாயினுடைய மகனும் அவளுடன் வந்திருந்தான்.

அவள் கொண்டுவந்த பணியாரம் வெகு ருசியாயிருந்தது. அரசன் அதனால் சந்தோஷமடைந்தான். அந்த வேளையில் அவன், நாம் இந்த மாதினிடம் பால் குடித்து வளர்ந்தோம். இந்த இவளுடைய பிள்ளையும் இவளிடமே பால் குடித்து வளர்ந்தான். இந்த முறையில் இவன் நமக்குச் சகோதரனாக வேண்டு மல்லவா? இவனுக்கேன் நாம் நமதரசுரிமையைக்



கொடுப்பது கூடாது,'' என்றெண்ணிச் சற்றுநேரம் ஆலோசனை செய்து பின், செவிலித்தாயின் பிள்ளைக்கே பட்டங் கட்டுவது என்று தீர்மானித்து அவர்களை அனுப்பிவிட்டுச் சபைக்குச் சென்று மந்திரியை அழைத்துத்தன் கருத்தைத் தெரிவித்தான். மந்திரி 'சரி' அப்படியே செய்வோம்' என்று விடைபகர்ந்து பின் மறுநாள் சபைக்கு ஒரு பசுங்கன்றை ஓட்டிக் கொண்டுவந்து அரசனை வணங்கினான். அரசன் பசுங்கன்றைக் கண்டதும்-'இது ஏன் பசுங்கன்றிங்கே' என மந்திரி நகைத்து எனக்குப்பின் மந்திரி பதவியை இதற்குத் தரவேண்டும். அதற்காக இப்போதே கொண்டு வந்து காட்டினேன்'' என்றான்.

அரசன்-என்னையா இது? விளையாடுகின்றீர்?-பசுங்கன்றுக்கு மந்திரி பதவியா?-எங்கேயாவது இப்படிப்பட்ட வழக்க முண்டா ? என்று கேட்டான்.

மந்திரி-வேந்தே, "செவிலித்தாய் மகனுக்குப் பட்டங் கட்டுவது எங்கேயாவதுண்டா? அது நடக்கும் போது இதனையேன் செய்வதுகூடாது?'' என்று கேட்டான்.

வேந்தன்-"எனக்கு மகனில்லை. எனக்கு முலை கொடுத்து வளர்த்ததாய் செவிலித்தாய். அவள் பிள்ளையும் அவளிடமே முலையுண்டு வளர்ந்தவன். அந்த முறையில் அவன் எனக்குச் சகோதரனாகிறபடியால் பட்டம் அவனுக்குக் கட்ட நிச்சயித்தேன் என்றான்.

மந்திரி-பிரபுவே, "எனக்குப்பின் மந்திரி பதவிக்கு வர எனக்கும் பிள்ளை யில்லையல்லவா?-இது தங்க

னுக்குத் தெரியும். நான் எந்தப் பசுவின் பாலை யுண்டு வளர்ந்தேனோ அந்தப் பசுவின் பாலையுண்டு இந்தக் கன்றும் வளர்ந்தபடியால் இது எனக்கு உடன் பிறப்பாகிறது. அந்தப் பாத்தியதைகொண்டு இதற்கு மந்திரி பதவி கேட்டேன்"-என்று கூறி நகைத்தான்.

அரசன் புத்திசாலி யாகையால், தான் செவிலித் தாய் மகனுக்குப் பட்டங்கட்ட நிச்சயித்ததைத் தவ றென்று காட்டத் தன் மந்திரி அந்த யுக்திசெய்திருக் கிறான் என்று தெரிந்துக்கொண்டு அவனுக்கு வெகு மதி தந் தனுப்பினான்.

அரசனோ பிரபுக்களோ ஒன்றைச் செய்வதாகத் தீர்மானித்தது. தவறாயிருந்தால் அதை அவ னுக்கு உடனே நேரில் தவறென்று கூறித் தடுப்பது உத்யோகஸ்தருடைய செய்கையாகாது. இப்படி யுக்தி முறையில் தடுப்பதே புத்திசாலித் தனமாகும். விவேகி கள் இப்படி தான் தங்கள் எஜமானனுக்கு ஹிதமான செய்கையைக்காட்டி மேன்மை யடைவார்கள்.

"விடங்கொண்ட மீனைப் போலும்
வெந்தழன் மெழுகு போலும்
படங்கொண்ட பாந்தள் வாயிற்
பற்றிய தேரை போலும்
திடங் கொண்ட ராமபாணம்
செருக்கலித்துற்ற போழ்து
கடங்கொண்டார் நெஞ்சம் போலக்
கலங்கினன் இலங்கை வேந்தன்"

## பெஞ்சமின் பிரான்க்லின் என்னும் பெரியாரின் உபதேசம்.

### (ஸைபுல் இஸ்லாம் பத்திரிகையில் வெளியானது)

ஊக்கத்துடன் பாடுபடுதல் நல்ல அதிர்ஷ்டத் துக்குத் தாயாகும். கஷ்டமில்லாமல் சுகமுண்டாவ தில்லை. வெயிலின் கஷ்டம் நிழலில் தெரியும்.

பிற ஜனங்களுக்கு எவன் பரோபகாரம் புரிகின் றானோ அந்தப்புண்யவானுக்கே ஆண்டவனும் உதவி புரிவான்.

ஒருகாரியத்தில் பிரவேசிப்பதற்கு மனப்பரிசுத் தம் அவசியம் வேண்டும். துருப்பிடித்துக் கோணிய திறவு கோலால் பெட்டி பூட்டுத் திறக்கப்படுவதில்லை. மனுஷ்யனுக்குச் சோம்பல் மகா கொடிய தடையா கும். எத்துணை சுறுசுறுப்புடையவராயிருக்கின்றோ மோ அத்துணை துரிதத்தில் பயனடைகின்றோம்.

சுகத்துடன் வாழ்வதற்கும் உலகத்தில் இன்ப மனுபவிப்பதற்கும் பெரும்பொருட் பாக்யம் வேண்டு மென்பது அவசியமில்லை. பணமில்லாமல் சுகவாழ்க் கை பெறுவோர் எண்ணிறந்தவருண்டு. சிறுவருவாய் கொண்டு நல்வாழ்க்கைவாழ்பவனே விவேகிசாலியா வான். சுகாதாரத்துக்குப் பணம் வேண்டுமென்பது அவிவேகமாகும்.

நாம் வஞ்சகமில்லாமல் முழுதினமு முழைத்துக் கொண்டிருப்போமானால் பட்டினியாய்க் கிடந்து பசியால் நலிந்துருகமாட்டோம். பிரயாசைபடுவோனுடைய வீட்டுக்குள் பசிக்கொடுமை நுழைவதில்லை, சோம்பேறிக்கும் பசிக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு.

ப்ரபஞ்சத்திற் காணப்படும் சர்வ சராசரங்களையும் சர்வமும் வல்ல ஆண்டவனே சிருஷ்டித்திருக்கிறான். கருணையுள்ள ஆண்டவன் படைத்தபொருள்களில் தீமையானது ஒன்றுமேயில்லை. எல்லாவற்றிலும் பிரயோசனகுணம் இயற்கையாகவுண்டு.

அது கூடாது-இது தகாது. இன்னொன்று அசாத்தியம் மற்றொன்று கிரமம் என்று கண்டவைகளிலெல்லாம் பிரமிப்பும் குற்றமுங்கொள்ளாதீர்கள். இக்குணம் உங்களை முழுச்சோம்பேறி யாக்கிவிடும். கோழைக்கு எதிலும் வெற்றியே கிடைக்காது. தைரியந்தான் ஆக்கமளிக்கும்.

மதுபானத்தில் அறிவை மழுக்கும் போதையிருக்கிறது. அதை எந்தச் சந்தர்ப்பத்திலும் உபயோகிக்காதீர்கள். அந்தப் பழக்கம் உங்கள் குடியைக் கெடுக்கும். உங்கள் ஞானத்தை நீக்கும். அதனிடம் நீங்கள் அடிமையாகப்போவீர்கள்.

மௌனம் மேலான குணமாகும். வீண்வார்த்தைகளை ஓயாது பேசிக்கொண்டிராதீர்கள். ஆனால் உங்களுக்கோ பிறருக்கோ பயனளிக்கும் சமயத்தில் மௌனத்தைக் கொண்டிருந்து விடப் போகின்றீர்கள்.



வீண்பேச்சு உங்கள் அரிய அவகாசத்தை வெளிப்போக்கும்.

உங்கள் தினசரி காரியம் ஒவ்வொன்றுக்கும் தீர்மானக் கிரம விதியிருக்கவேண்டும். உங்கள் வேலைகளுக்கெல்லாம் முதலில் ஒரு திட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு காரியத்தில் பிரவேசியுங்கள்.

சிறுகாரியமானாலும் அதையொட்டி முன்னாலோசனை செய்து கொள்ளுங்கள். அதன் பிறகே பிரவேசியுங்கள். இன்னின்ன காரியத்தை இன்னின்ன சமயத்தில் புரிவதென்று வரையறுத்துக் கொள்ளுங்கள்.

ஒருகாரியத்தில் பிரவேசிப்பதற்கு முன் திடசித்தத்தை முன்னிருத்திக் கொள்ளுங்கள். பிரவேசித்த காரியத்தை இடையில் நேரிடும் தடைகண்டஞ்சிக் கைவிடாதீர்கள். இறுதிவரையிற் பிரயாசைப்பட்டுப் பூர்த்திசெய்து விடுங்கள்.

சிக்கனம் ஒருபெரிய நல்ல சாதனமாகும். உங்கள் செலவுகளை ஆனமட்டும் குறைத்துக்கொள்ளுங்கள். ஆனால் வரம்பை மீறி லோபித்தனத்தி லிறங்கிவிடாதீர்கள். பரோபகாரவிஷயத்தில் தாராளமான மனங்கொள்ளுங்கள். வீண்செலவுகளை முழுவதும் ஒழித்துவிடப் பிரயாசைப்படுங்கள்.

உங்கள் ஜீவ அம்சமான அரியநேரத்தை வீணில் போக்கிவிடாதீர்கள். ஒவ்வொரு க்ஷணத்திலும் ஏதேனும் ஒரு பிரயோசனமான வேலையைச் செய்யுங்கள்.

அவசியமில்லாதவேலைகளில் வீண் சிரமப்படாதீர்கள். நன்மையை உத்தேசியுங்கள்.

எந்த எளியவரையும் ஏமாற்றாதீர்கள். இது தீயகுணம். பரந்தநோக்கத்துடனிருக்க வேண்டும். நீதியோடு வாழுங்கள். சொன்ன சொற்றவறாமல் நடந்துகொள்ளுங்கள். நீ ஒருவனை மோசஞ்செய்தால் உன்னை யொருவன் பெரியமோசம் செய்வான்.

சத்தியத்தை எத்தகைய கஷ்டத்திலும் கைவிடுதல் கூடாது. பிறர்க்குத் தீங்கு செய்தல் தகாது. உங்கள் கடமையைச் செவ்வனே செய்து முடியுங்கள். நியாயமற்ற முறையில் பிறரை நடத்தாதீர்கள்.

---

க்ரந்தா நகேகா நவலோக்யத்வம்
கண்டதைக் கற்கப் பண்டிதனாவான்

"ஸ்வதேசே பூஜ்யதே ராஜா
வித்வான் ஸர்வத்ர பூஜ்யதே"

மன்னனுக்குத் தன்றேய மல்லார் சிறப்பில்லை. கற்றோர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு.

"பரேஷா முபகாரார்த்தம்
யஞ்ஜீவதி ஸ ஜீவதி"

பரோபகாரி எவனோ அவன்பிறப்பே பயனடைந்ததாகும்.

## REMEDY FOR SNAKE BITE.

## பாம்பு கடிக்கு மருந்து.

---

பாம்புக்கடிக்கு வாழைமரத்தின் சாற்றைக் கொடுத்தால் கடித்தவர்கள் இறக்காமல் பிழைப்பார்கள் என்று தெரியவருகிறது. இதை அனுபவத்தில் பரீக்ஷித்துப்பார்த்த ஒருவர் ஒரு பத்ரிகைக்குப் பின்வருமாறு எழுதியிருக்கிறார்:

"ஏதோ ஒரு தேசத்தில் விஷப்பாம்புகள் கடிக்கப்பட்டவர்களுக்கு வாழை மரத்தின் சாற்றை உள்ளுக்குக் கொடுக்கிறது வழக்கமென்று சில வாரங்களுக்கு முன் "ட்ராபிகல் அக்ரிகல்சரிஸ்ட்" என்ற பத்ரிகையில் நான் படித்தேன். ஆனால் நான் அதை நம்பவில்லை.

"நேற்று மாலை ஸுமார் 6-மணிக்கு என்னுடைய நாய் ஒன்றை ஒரு கொடிய நல்லபாம்பு 4 இடங்களில் கடித்து விட்டது. அந்தப் பாம்பை நாய் கொன்று விட்டபோதிலும், நாக்கில் இரண்டு இடங்களிலும் கடித்துவிட்டுப் போய்விட்டது. அந்தப் பாம்பு விஷப்பாம்புகளில் மிகக் கொடிய வர்க்கத்தைச் சேர்ந்தது.

"என் நாய்களை எவ்வளவு தடவைகளோ பாம்புகள் கடித்திருக்கின்றன. நாக்கில் கடிபடாத ஸமயங்களிலெல்லாம் அவற்றிற்கு எலுமிச்சம் பழ ரஸத்தையும் நெய்யையும் உள்ளுக்குக் கொடுத்தும் கடித்த

இடங்களைப் பேனாக்கத்தியால் சுரண்டிவிட்டு அங்கு சேர்ந்துள்ள கரு ரத்தத்தைப் பிதுக்கி எடுத்துவிட்டுப் கண்டீஸ் ப்ளூயிட் (Condy's Fluid) என்ற மருந்தை மேலே தடவியும் ஸ்வஸ்தப்படுத்தி இருக்கிறேன். ஆனால் நாக்கிலேயே கடிப்பட்டுவிடுமானால் ஒரு பொழுதும் ஸ்வஸ்தப்படுத்த முடிவதில்லை.

"நேற்று மாலையும் நாயைப் பாம்பு கடித்தவுடன் மேற் சொன்னவாறு எலுமிச்சம்பழ ரஸத்தையும் நெய்யையும் உள்ளுக்குக் கொடுத்து மேலுக்கு கண்டீஸ் ப்ளூயிடைத் தடவினேன். ஆனால் அது ப்ரயோஜனப்படவில்லை. நாயின் நாக்கு வெளுத்துப் போய், அது மயங்கிப் போய்விட்டது. அப்பொழுது நல்ல வேளையாக "ட்ராபிகல் அக்ரிகல்சரிஸ்ட்" பத்ரிகையில் படித்தது ஞாபகத்துக்கு வர, உடனே ஒரு பெரிய வாழை மரத்தை வெட்டித்தள்ளி மரத்தின் சாற்றைப் பிழிந்து ஒரு கோப்பை நிறைய இரண்டு தடவை நாய்க்குக் கொடுத்தேன். என்ன ஆச்சரியம்! சற்று நேரத்துக்கெல்லாம் நாய் தெளிவடைந்து அரைமணி நேரத்துக்குள் நடமாட ஆரம்பித்து விட்டது."

இன்னொருவர் பாம்பு கடித்த ஒரு பையனுக்கு வாழைமரச்சாற்றைப் பத்து நிமிஷத்துக்கொரு தடவையாக இரண்டு மணிநேரம் கொடுத்து வந்ததில் பையன் ஸ்வஸ்தமடைந்து விட்டான் என்று தெரிய வருகிறது. எப்படியும் கடிவாய்க்கு மேல் ஒரு கட்டுப் போட்டு கடிவாயைக்கீறிக் கரு ரத்தத்தை வெளிப்



படுத்த வேண்டியது ரொம்பவும் அவசியம். இந்த முறையை உபயோகித்து பயன் கண்ட அநேகர் தமது அனுபோகத்தைப் பத்ரிகைகளில் தெரிவித்திருக்கிறார்கள். இது ரொம்பவும் ஸுலபமான வைத்தியமாகையால் யாவரும் உபயோகித்துப் பயனடையலாம். மேலும் ஒவ்வொருவரும் தமது வீட்டுக் கொல்லையில் இரண்டொரு வாழைமரம் வைத்துப் பயிர்செய்வது நல்லது.

### PAPAW JUICE.
### பப்பாளியின் பால்

பப்பாளிக்காயின் பாலுக்கு நல்ல வைத்யகுணமிருக்கிறது. அதை யுட்கொள்வதால் ஜீரணம் நன்றாக ஆகிறது. வயிற்றிலுள்ள பூச்சிகள் இறந்து போகின்றன. பப்பாளி விதைக்கும் இக்குணங்களிருக்கின்றன. மேலும் பப்பாளிப்பாலை தேமலின் மேல் பூசினால் அது போய்விடும்.

### MYOPIA AND DIABETES
### கிட்டத்துப் பார்வையும் நீர் ரோகமும்

அதிபால்யமும், ரொம்பக்கிழமும் இல்லாத நடுத்தர வயஸுள்ளவர்களுக்கு தூரப்பார்வை குறைந்தால் அவர்களுடைய மூத்ரத்தைப் பரீக்ஷித்துப் பார்த்து அதில் சர்க்கரை யிருக்கிறதாவென்று பார்க்க வேண்டும். தூரத்ருஷ்டிக் குறைவு ஏற்படுவது சில ஸமயங்களில் அவர்களுக்கு நீர்ரோகம் வருவதற்கு அடையாளமாகும்.

## MEDICAL PROPERTIES OF SUGAR
## சர்க்கரையின் மருந்து குணம்

யாருக்காவது ரத்தகாயம் உண்டானால் க்ராமாந்தரங்களில் சர்க்கரையையோ கரிப்பொடியையோ காயத்திற்கு வைத்து கட்டிவிடுவது நாம் ரொம்ப காலமாகச் செய்துவரும் வழக்கம். இருந்தாலும் அனேகருக்கு சர்க்கரையின் மருந்து குணங்கள் தெரியாது. சர்க்கரையை ரணங்களுக்கு உபயோகிப்பதால் சீழ் பிடிப்பதில்லை. ரணங்களில் உற்பத்தியாகும் கிருமிகள் செத்துப்போகின்றன.

---

## சுக வழி

சுத்தமான ஆகாயம் வந்து உலாவக்கூடிய அறையிலே படுத்துத் தூங்கு. சுத்த ஜலத்திற் குளித்துச் சுத்த ஜலத்தைக் குடித்து வா. கண்ட பதார்த்தங்களைக் கண்ட இடத்தில் தின்னாதே. மிதமிஞ்சிய தித்திப்புள்ள பலகாரங்களையும் பழுக்காத கனிகளையும் வேகாத காய்களையும் தின்னாதே. நனைந்த துணியை உடுத்துக் கொண்டலையாதே. ஈரமான இடத்தி லுட்காராதே. வீட்டின் அருகே ஜலம் தேங்கியிருக்க இடங்கொடாதே; நீ இருந்து படிக்கும் அறையை அடிக்கடி சுத்தம் செய்யும்படி செய். சுண்ணாம்படித்துக்கொள். தினந்தோறும் மைதானத்திலே போய் உலாவு. அதிகாலையில் விழித்துக்கொள். சூரியோதயமாகும் வரையில் தூங்காதே. இரவில் வெகுநேரம் விழித்துக் கொண்டிராதே: கடவுளுக்குப்பயப்படு. தாய் தந்தையரைக் கனம் பண்ணு. சுற்றத்தாரைப் பகைத்துக் கொள்ளாதே! நல்ல சிநேகிதனோடு கூடியிரு.

## ஓர் அற்புதமான தீர்மானம்.

ஒரு விளைநிலத்தைக் குறித்து ஒரு யௌவன மாதுக்கும், ஒரு வாலிபனுக்கும் வழக்கு நேர்ந்தது. குத்தகைச்சீட்டின் உறுதியைக்கொண்டு அவ்வாலிபன் குறித்த நிலம் தனக்குரியதென்றும், ஒரு மரணசாதனத்தின் உறுதியைக்கொண்டு அப்பெண் அது தனக்குரியதென்றும் நீதிபதியுடன் முறையிட்டனர். நீதிபதி யோசனைசெய்து அப்பெண்ணை நோக்கி, "அவ்வாலிபன் நல்ல வயதும் யோக்கியமு முடையவனாகக் காணப்படுகிறான்; இவ்வழக்கை நீங்கள் நடத்தினால் வீண்செலவுகள் ஏற்பட்டு உங்கள் கையிலுள்ள சொற்பப் பொருளும் செலவழிந்துவிடும். ஆதலால், நான் சொல்லப்போகுந் தீர்ப்புக்கு உங்களைச் சம்மதிக்கவிடாது பலர் தடுப்பார்கள்; ஆயினும் நான் உங்களுக்கு நல்ல ஒரு தீர்ப்புக் கொடுக்கிறேன். அஃதாவது நீங்களிருவரும் விவாகஞ்செய்து கொள்வீர்களானால் அந்நிலமும் உங்களுக்குச் சொந்தமாகிவிடும்" என்று தீர்ப்புக் கூறினர். அவ்விதமே அவ்விருவரும் சம்மதித்து விவாகஞ்செய்து சந்தோஷமாய் வாழ்கின்றார்களாம்.

## பிறருடைய விஷயங்களை அறிந்துகொள்ள விரும்புதல்

ஒரு மனிதன் அந்தரங்கமான சில விஷயங்களைப் பற்றி ஒரு கடிதம் எழுதிக்கொண்டிருந்தான். அவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த மற்றொருவன் அக்கடிதத்

தைக் கவனித்துக்கொண்டேயிருந்தான். அப்பொழுது கடிதம் எழுதிக்கொண்டிருந்தவன் அக்கடிதத்தில் " ஒரு மூடன் என் கடிதத்தில் எழுதியுள்ள விஷயங்களை உற்றுப்பார்த்துக் கொண்டிருக்கிறான், ஆகையினாற்றான் நான் என்னுடைய மற்ற இரகசியங்களை இதில் எழுதவில்லை" என்று எழுதினான். அப்பொழுது கடிதத்தைப் பார்த்துக்கொண்டிருந்தவனுக்குக் கோபம்வந்து "நான் உன் கடிதத்தைப் பார்க்கவில்லையே" என்றான். அதற்கு எழுதுகிறவன் "உன்னைப் பற்றி நான் ஒன்றும் எழுதவில்லையே" என்று மறுமொழி பகர்ந்தான்.

## ஒரு புத்திசாலியான சிறுவன்

ஒரு வர்த்தகசாலைக்கு ஒரு நாள் ஒருவன் சென்று தனக்களவுள்ள ஒரு சோடி சப்பாத்துகளைத் தெரிந்து விலை கேட்டபோது அங்கிருந்த வாலிபன், அவற்றின் விலை 16ஷிலிங் 6பென்ஸ் என்று தெரிவித்தான். அதைக்கேட்ட அவன் "என்னிடம் 13ஷிலிங் 6பென்ஸ் தானிருக்கின்றது. மிகுதியை நாளைக்குக் கொண்டு வந்து தருகிறேன்; உன் விருப்பம் எப்படி" யென்று கேட்டான். அவ்வாலிபன் நல்லதென்று கூறி இரண்டு சப்பாத்துகளை நன்றாக கடுதாசியில் சுற்றி அவனிடம் கொடுத்து அனுப்பினான். சிறிது நேரத்தில் அவ்வர்த்தக சாலையின் சொந்தக்காரன் வந்து அவ்வாலிபனைக் கண்டித்து "நீ செய்தது முழுதும் தவறு; உத்தரவில்லாமல் நீ ஏன் கடன் கொடுத்தாய் அவன் இனி ஒருபோதும் இங்கு வரமாட்டானே" யென்றான். அவ்வாலிபன் தன் எஜமானனைப் பார்த்து 'அவன் இங்கே தவறாமல் வருவான். ஏனென்றால் நான் அவனுக்குக் கொடுத்தனுப்பிய சப்பாத்துகளிரண்டும் இடதுகாலுக்குப் போடவேண்டியன. ஆதலால் அதை மாற்றுவதற்காக எப்படியும் இவன் இங்கு வருவான்" என்று விடை பகர்ந்தான்.



## வெற்றிலையின் குணவிசேஷங்கள்

ஜீரணசக்தியை மிகு விரைவாகச்செய்யும். ஒரு நாளைக்கு ஐந்துமுறை, ஒரு பாக்குடன் ஏழு வெற்றிலை போட்டு வந்தால் வயிற்றுக்கடுப்பு, மலபந்தம், மலத்தோடு இரத்தம் அல்லது சீழ் வடிதல் இரண்டு நாளில் நீங்கிப்போகும். பார்வைக் குறைவு, ஞாபகக்குறைவு, நரம்புத்தளர்ச்சி யுடையவர்கள் ஒவ்வொருநாளும் வெற்றிலையை உபயோகித்துவந்தால் நீங்கிப் போகும். தேள்கொட்டின விடத்தும் அல்லது ஒரு கடித்த விடத்தும், வசம்புத்தூளை வெற்றிலைச் சாற்றுடன் அரைத்து முப்பது நிமிஷத்திற்கொருமுறை பூசினால் வலி நீங்கிப் போகும். கிரோசினாயிலைக் குடித்துவிட்டவர்கள் அரையாழாக்கு வெற்றிலைச் சாற்றைப் பசுமோருடன் கலந்து குடித்தால் பத்து நிமிஷத்திலேயே குணந்தோன்றும்

## யானையின் உணர்வு

லண்டன் மிருகக் காட்சிசாலையில், ஓர் யானையிருந்து அது 1885-ம வருஷம் இறந்துபோயிற்றாம். அந்த யானை இறந்த சில வருஷங்களுக்கப்பால் அங்கே ஸர்க்கஸ் யானை யொன்று வந்ததாம். அது அந்த யானை இறந்த இடத்திற்கு வந்ததும் மண்டியிட்டுப் பிரலாபித்ததாம். போகும்போதும் வரும்போதும் இப்படியே செய்ததாம். யானையின் இந்த உணர்ச்சியைக்கண்டு யாவரும் அதிசயித்தனராம்.

## விநோத விஷயங்கள்.

(1) மருமகன்—"மாமா! நீங்கள் அவசியம் கல்யாணத்துக்கு வரவேண்டும். மாமியையும் அழைத்துக்கொண்டு வரவேண்டும்"—

மாமா—"நானும் மாமியும் வந்தாற் போதுமா?—பணமும்கூட வரவேண்டாமா?—பணமில்லாவிட்டால் என் வருகைக்கு மதிப்பேது? ஆதலால் நாங்கள் வருவது பிறகொரு சமயம் வைத்துக் கொள்கிறோம். முந்தி நாங்கள் ஓதியிடவேண்டிய பணத்தை அனுப்பி விடுகிறோம்"—என்று கூறிச்சென்று கல்யாணத்துக்குப் பணத்தையே தனக்குப் பதிலாக அனுப்பித் தந்து கௌரவமடைந்தான்.

(2) நான் ஒரு வீட்டு விவாகத்துக்குப் போனேன். அங்கே ஒருவர் தவறாமல் எல்லோரும் பட்டும் பணமும் பவுனும் வதூவரர்களுக்கு ஓதியிட்டார்கள். என்கையி லொன்றுமில்லை. எனக்குத் துணையாக இன்னொருவ ரிருந்தார். அவர் கையிலும் பணமில்லை. அவர் "நாம் இந்தக் கல்யாணத்துக்கு வந்தது தவறு"—என்று சொல்லி வருந்தினர். நான், "சும்மா இரும்—கவலைப்படாதேயும்" என்று கூறி என் கையில் வைத்திருந்த பகவத்கீதை யென்னும் புத்தகத்தை என் நண்பர்பேரிலும், நான்கணாவை, என் பேரிலும் ஓதிவைத்தேன்.

இது கண்டு யாவரும் என்னை வியந்தனர். இது சரியான மரியாதை யெனப்பேசிக் கொண்டனர். சாத்தியமாகக்கூடிய தெனவும் மகிழ்ந்தார். இனி இப்படிச் செய்வதே உசிதம் என்றும் பேசிக்கொண்டனர்.

(3) ஒருவன் தன் மனைவியுடன் பேசும்போது பல்லில் கை வைத்துக்கொண்டே பேசினான். அவள் காதைக் குச்சியால் குடைந்துகொண்டே அதைக் கேட்டாள். இவர்கள் சம்பாஷணையை ஒருவன் தன் மூக்கைக் குடைந்துகொண்டே கேட்டான். இவர்களில் யார் விவேகிகள்—என்று வியந்தவண்ணம் நான் நின்றுகொண்டிருந்தேன். அப்பொழுது கணவன்—"ஏன் காதைக்குடைகின்றாய்? அது பார்ப்பவருக்கு அருவருப்பைத் தாராதா?—என்றான். மனைவி "நீர் ஏன் பல்லில் கை வைத்துக்கொண்டே பேசுகிறீர்? இது பிறருக்கு அருவருப்பைத் தராதா?—பிறருக்கேன்; எனக்கே அருவருப்பைத் தந்தது தான் நான் பலதரம் சொல்லிப் பார்த்தேன். நீர் அந்த வழக்கத்தை விடவில்லை. அதனால் நான் காதைக்குடைந்து கொண்டே உமது பேச்சைக் கேட்டேன். நீர் பிறருக்கு அருவருப் புண்டாக்குவதை நினைக்கவில்லை. உமக்குப் பிறர் அருவருப் புண்டாக்குவது தெரிகிறது. இது உலக இயல்பாயிருக்கிறது. நாமிருவரும் இப்படியிருப்பதைப்பார்த்துத் தான்—இதோ பக்கத்திலிருப்பவர் மூக்கைக் குடைந்துகொண்டே நிற்கிறார்" என விநோதமாகப் பதிலளித்தாள். கணவன் வெட்கினான். நான் "சபாஷ்; நீயே புத்திசாலி" என்று அந்த மாதைப் புகழ்ந்து அப்பால் சென்றேன். (கந்தன்)

# பெற்றமனம் பித்து பிள்ளைமனங்கல்லு

திரிதராஷ்டிரன் சந்திரவம்ச அரசரில் ஒருவன். இவனுக்குப் பாண்டு என்று ஒரு தம்பி யிருந்தான். திரிதராஷ்டிரன் பிறவிக் குருடன். அதனால் பாண்டு அரசு புரிந்து வந்தான். பாண்டுவுக்கு யுதிஷ்டிரர், பீம சேனன், அர்ச்சுனன், நகுலன், சகாதேவன் என்று ஐந்து குமாரர்கள். திரிதராஷ்டிரனுக்கு நூறுபுத்திரர் கள். இவர்களில் மூத்தவனுக்குத் துரியோதனன் என்று பெயர். மற்றவர்களுக்கும் பெயர் உண்டு. இவர்களை மொத்தமாகத் துரியோதனுதியர் என்றும் கௌரவர் என்றும் அழைப்பதுண்டு.

பாண்டு கொஞ்சகாலம் அரசு புரிந்தபின் இறந்து போனுன். அப்பால் இவர்களுக்குள் சச்சர வேற்பட்டுப் பிரிந்தார்கள். பாண்டவர்கள் தங்கள் பரம் பரை ராஜதானி நகரமாகிய ஹஸ்தினபுரியை விட்டுச் சென்று தங்களுக்கென்று ஒரு நகரம் உண்டாக்கிக் கொண்டு அதற்கு இந்திரப்பிரஸ்த மென்று பெயரிட்டு அங்கிருந்து அரசுபுரியலாயினர். துரியோதனுதியர் ஹஸ்தினபுரியி லிருந்து அரசுபுரிந்தார்கள்.

பாண்டவர்கள் நிகரற்ற பராக்ரமசாலிகள். அதனுல் அவர்கள் பல அரசர்களை வென்று தங்கள் இராஜ்யத்தைப் பலப்படுத்திக்கொண்டு அளவிறந்த செல்வச் சிறப்புடனும் புகழ்ச்சியுடனும் தர்மம் தவறு மல் அரசுபுரிந்தனர். அது கண்டு துரியோதனன்



பொருமை கொண்டான். துரியோதனுதியர் பாண்ட வர்களின் குணங்களுக்கு முற்றிலும் மாருன குண முடையார்கள். கொடியவஞ்சகர்கள். தரும சிந்தனை யில்லாதவர்கள். குடிகளின் க்ஷேமலாபங்களைக் கரு தாமல தங்கள் மனம் போனபடி நடக்கும் ஈனர்கள். பெரியோர்களுக்கு அடங்கி நடக்காமல் தங்களையே பெரியோராகக் கருதி இறுமாப்பு கொள்ளும இழிஞர் கள். அவர்களின் துரியோதனனுடைய குணம் எல் லோருக்கும் அருவருப்பைத் தரத்தக்கதா யிருந்தது. அதனுல் அவர்களுக்கு இகழ்ச்சியும் குடிகளின் சாப மும் ஏற்பட்டன.

பாண்டவர்கள் மகாமேதாவிகள். தரும சிந்தனை யுடன் கூடியவர்கள். கடவுளுக்குப் பயந்து நடப்பார் கள். பெரியோர்கள் கூறும் நியாயங்களுக்குக் கட்டுப் பட்டு நடப்பார்கள். மானம் பெரிதாக மதிப்பார்கள். அதனுல அவர்கள் புகழ்ச்சியும் குடிகளின் அநுசரணை யும் பெற்று மகாதேஜஸுடன விளங்கினுர்கள். இதனுல் இவர்கள் திரௌபதி என்னும் பெயர் கொண்ட துருபதராஜனுடைய பெண்ணை மணந்தார் கள். ஜனங்களெலலோரும் பாண்டவர்களை வாழ்த் தினுர்கள். அவர்கள் ஒரு பெரிய சபா மண்டபங் கட்டி அதில் இராஜஸூயம் என்னும் யாகத்தை நடத்தி முடித்தார்கள். அந்த யாகம் ஒருவராலும் செய்து முடிப்பதற் கரியது.

இப்படிப்பட்ட ஒரு நல்ல வாழ்க்கை அடையவே, துரியோதனனுக்கு இவர்களிடம் கொண்ட பொருமை

மேன்மேலும் வளர்ந்தது. அதனால் அவன் தன்னுடன் சேர்ந்தவர்களாகிய சகுனி என்கிற மாமனுடனும் கர்ணன் என்னும் சிற்றரசனுடனும் ஆலோசனை செய்து பாண்டவர்களை வஞ்சகச் சூதாட அழைத்து அவர்களுடைய இராஜ்யத்தையும் ஐசுவரியத்தையும் அபகரிப்பதெனத் தீர்மானஞ் செய்துகொண்டு தன் தந்தையாகிய திருதராஷ்டிரனிடம் அநுமதி கேட்டான்.

திரிதராஷ்டிரன், ''துரியோதன! இது நல்ல யுக்தியல்ல. இந்த வஞ்சகம் உன்னைக் கெடுக்கும். பாண்டவர்களிடம் பொறாமை கொள்ளாதே. அவர்கள் தங்கள் சாமர்த்தியத்தினாலும் தெய்வ பலத்தினாலும் உலகம் மதித்துப் பேசும்படியான உயர்ந்த வாழ்வை அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நீ இப்படிப்பட்ட தீயசெய்கை செய்வது தவறு'' என்று தன்னாலியன்ற வரையில் புத்தி சொல்லிப் பார்த்தான். அவன் அவனுடைய புத்திமதியைக் கேட்காமல் அவனைப் பலவிதத்தில் தொந்தரை செய்து அழுதான். திரிதராஷ்டிரன் பிள்ளையிடத்திற் கொண்ட வாஞ்சையினால் அந்த அவனுடைய சூழ்ச்சிக்கு இடந் தந்தான்.

பின், துரியோதனன் ஒருநாள் பாண்டவர்களை வரவழைத்துச் சகுனியுடன் பாண்டவர் தலைவராகிய யுதிஷ்டிரர் என்கிற பரம தருமகுண சீலரைச் சூதாடவைத்து அவரையும் அவருடைய தம்பியாரையும் திரௌபதியையும் அடிமையாகக் கொண்டான்; இராஜ்யத்தையும் அபகரித்துக் கொண்டான். அப்பால் திரிதராஷ்டிரன் பாண்டவர்மீது இரக்கங்கொண்டு துரியோதனனை வெறுத்துப் பேசி அவர்களை



அடிமைத்தனத்தினின்று விடுவித்து அவர்களுடைய அரசை அவர்களுக்குக் கொடுத்து அனுப்பினான்.

திரிதராஷ்டிரனுக்குப் பாண்டவர்கள் தன் புத்திரர்களிடம் பகைகொண்டு அவர்களை என்றேனும் ஒருநாள் போரில் கொன்று அரசைக் கைக்கொள்ளக்கூடும் என்கிற பய மேற்பட்டது. அதனால் கிழவன் யுதிஷ்டிரரை அழைத்து, பின் வருமாறு கூறுகிறான்.—

''நீ தம்பியோடும் பத்தினியோடும் இரதகஜதுரகபதாதிகள் சூழ உன் இராஜ்யத்திற்குப் போய்ச் சுகமாயிரு. இப்போது நான் ஒரு பேச்சு சொல்லுகிறேன். அதைக் கேட்டு அப்படியே நீ நடக்க வேண்டும். அதனால் உனக்கு மேன்மேலும் நன்மையுண்டாகும். உனக்குத் தெரியாததல்ல. நீ சகல தருமங்களையும் அறிந்தவன். பெரியோர்கள் பலரிடம் பணிவிடை செய்து தரும சூக்ஷாகமங்களை உணர்ந்தவன். வணக்கம் ஒடுக்க முதலான சகல நற்குணங்களும் அமைந்தவன். ஆனபடியினாலே உனக்குச் சொல்லவேண்டியதில்லை. ஆயினும் சொல்லுகிறேன்; நீ பீமன் முதலான தம்பிமாரிடத்தில் எப்படி அன்புடையவனாயிருக்கிறாயோ அப்படியே துரியோதனன் முதலானோரிடத்திலும் அன்புடையவனாயிருக்கவேண்டும்.

உலகத்தில் ஒருவன் அபகாரம் செய்தால் அவன்மேல் கோபம் உண்டாவது இயல்பு. ஆனாலும் அதைப் பாத்திராபாத்திர மறிந்து செலுத்த வேண்டும். அவனே புத்திமான். அவனே தருமசீலன். மேலும் கோடரியானது எதின்மேல் எறியப்பட்டாலும்

அதைப் பிளக்கும். ஆனாலும கல்லின்மேல் போட்டால் கைகளுக்குச் சிரமமுண்டாவது மல்லாமல் கல்லும் பிளவுபடுவதில்லை. கோடரியும் கூர் மழுங்கிப் போகிறது. அதுபோலவே கோபம் என்னும் கோடரியைப் பந்துக்களென்னும் கல்லின்மேல் எறிந்தால் பின்பு பெரும் விசனத்திற்கிட முண்டாகுமே யன்றி அவர்களுக்கு அதினால் அபாயம் நேரிடாது.

ஏனென்றால் கோபமாகிய இந்தக்கோடரி அவர்கள்மேல் எறியப்படும்போதே கூர்மழுங்கிப் போகின்றது; அல்லது ஒருவேளை மழுங்காமல் அபாயத்தைத் தான் உண்டாக்கினாலும் இவனுக்கு அதனால் தீராத பழியும் பாபமும் வாராமலிரா.

மேலும் பெரியோர்கள் அபகாரியிடத்திலும் நன்மையையே சிந்திப்பார்களல்லவா?-என் புத்திரர் வெகு மூடர்கள்; அகங்காரம் பிடித்தவர்கள். ஆனது பற்றி உன் விஷயத்திற் செய்யத்தகாத பொல்லாங்கை செய்தார்கள். அதை எவ்வளவும் சிந்திக்க வேண்டாம். அந்தகனும் கிழவனுமாகிய என்னையும் உன் பெரிய தாயாராகிய காந்தாரியையும் பாலித்து எத்தனை அபராதங்களிருந்தாலும் பொறுத்துக்கொள். நாங்களிருவரும் உங்களுக்கு நன்மையைச் சிந்தித்துக் கொண்டிருக்கிறபேர்கள். இப்படி இதிற் கலகம் நேரிடுமென்று தெரிந்திருந்தால் இக்காரியத்திற்கு இடந் தந்திருக்கவே மாட்டேன். யாருக்கும் வரவேண்டியது வழியில் தங்காது. வந்தே தீரும கவலைப்படாதே! உன் பட்டணம்போய்ச் சுகமாயிரு" என்று புத்திமதி சொல்வதுபோல் தன்



னுடைய துஷ்டப் பிள்ளைகளின் குற்றங்களை மன்னித்துக் காப்பாற்றவும் வேண்டுமென்று கேட்டுக் கொண்டான். யுதிஷ்டிரர், மகா தருமகுண சீலராகையினால் 'தங்களுடைய இஷ்டப்படியே நடக்கிறேன். உங்கள் பிள்ளைகளிடங் கொண்ட கோபத்தை மறந்தேன். கவலை வேண்டாம்' என்று சொன்னான்.

ஆகா! என்னென்று சொல்வது புத்ரவாஞ்சையை! இப்படிப்பட்ட துஷ்டப் பிள்ளைகளை வெட்டி கழுவிற் கல்லவா இறையாக்குவன் புத்திமானாகிய ஒரு தந்தை அந்தத் துஷ்டப் பிள்ளைகளை ஆதரிக்க வேண்டு மென்றும் அவர்களுடைய குற்றத்தை மன்னிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்ட இவன் மதியைக் கவனியுங்கள். இது புத்திரனிடத்து கொண்ட பித்தினால் ஏற்பட்டதல்லவா?-இதனாலே தான் பெற்ற மனம்பித்து என்கிறார்கள். அநேகமாகத் தங்கள் பிள்ளைகள் செய்யுந் துஷ்டத்தனம் பெற்றவர்களுக்குத் தெரிவதில்லை.

இது இப்படி நடந்ததும், துஷ்டனாகிய துரியோதனன் மறுபடியும் உடனே தன் தோழருடன் துராலோசனை செய்து, பாண்டவர்களை முன்போல் சூதுக்கழைக்க விரும்பி அதற்கு அநுமதி தரவேண்டுமென்று பல நியாயங்களை எடுத்துக் கூறி அழுதான். குருட்டுக் கிழவன் புத்திரனிடம் கொண்ட பித்தினால் அந்தச் செய்கை தீயதென்றும் குலத்தையே அழிக்கக் கூடியதென்று தெரிந்தும் மகனுடைய வேண்டுகோளுக்கு இணங்கிப் பாண்டவர்களை வரவழைத்தான்.

பாண்டவர்கள் தங்கள் பெரிய தந்தை யென்கிற மரியாதைகொண்டு கிழவன் அழைத்ததற்கு இணங்கி வந்து முன்போல் சூதாடி அரசை இழந்தார்கள். துரியோதனன் அப்பால் பாண்டவர்களைப் பதினான்கு வருஷகாலம் வனவாசஞ் செய்யவும் ஒரு வருஷம் அக்ஞாதவாசஞ் செய்யவும் கட்டளையிட்டனுப்பினான். திரிதராஷ்டிரன் இது தகாத செய்கை யென்று, தான் சொல்லியது மல்லாமல் பெரியார்களைக் கொண்டு சொலலவும் செய்தான். அவன் மகா துஷ்டனான படியினால், பிள்ளை மனங்கல்லு என்பதற்கிணங்க அவன் எவருடைய புத்திமதியையும் செவியிற் கொள்ளாமல் கல்லாயிருந்து தன் மனம்போனபடி நடந்து மகிழ்ந்தான்.

அப்பால் பாண்டவர்கள் வனவாசமும் அக்ஞாதவாசமும் கழித்துவந்து தங்கள் இராஜ்யத்தைக் கேட்டார்கள். திரிதராஷ்டிரனும் மற்றுமிருந்த பெரியாரும் பாண்டவர்களுக்கு அவர்களுடைய இராஜ்யத்தைக் கொடுத்து விடும்படி துரியோதனனுக்கு வெகுதூரம் புத்திமதி கூறினார்கள். தந்தை காலில் விழுந்த தோஷமாகக் கெஞ்சினான். துரியோதனன், கொடுப்பதில்லை யென்று மறுத்தான். பின் பாண்டவர் போரிடத் தொடங்கிக் குருக்ஷேத்திரத்தில் பதினெட்டுநாள் கொடிய யுத்தஞ்செய்து துரியோதனாதியரைக் குலத்தோடழித்துத் தங்கள் இராஜ்யத்தை யடைந்து சுகமாயிருந்தார்கள்.

துரியோதனாதியர் இப்படி அழிந்த காலத்தில் திரிதராஷ்டிரன் மனம் பட்டபாடு கொஞ்சமல்ல. துஷ்டப் பிள்ளைகளைப பெற்றவனும் அவர்களுக்கு இடம் கொடுத்தவனும் இந்தத் துர்க்கதியைத்தான் அடைவார்கள் என்று உலகமெல்லாம் தெரிந்து கொண்டது.

## ஓர் அம்மையாரின் தெய்வீக சக்தி

நான் பல மாதங்களாக அம்மையாரின் அருள் செயல்கள் எனப் பத்திரிகைகளில் வெளிவந்ததை, ஐயமுற்று நேரில் காணவேண்டியே, சென்ற மாதம் (19-8-29) நானும் எனது நண்பர்களுமாக சென்னையிலிருந்து 158-வது மைலில் அதாவது விருதாஜலத்திற்கு 4-வது ஸ்டேஷனென்னும், செந்துறை ஸ்டேஷனுக்கு 7½-மயிலில் மருதூர் என்னும் கிராமத்திற்கு மாட்டு வண்டியில் ஏறிச்சென்றோம். சென்று அம்மையார் வீட்டை யடைந்தோம். அம்மையார் வீட்டில் இல்லை. வெளியே போயிருப்பதாகச் சொன்னார்கள். பிறகு 10-நிமிஷத்திற் கெல்லாம் வெளியே போயிருந்த அம்மையார் வந்தனர். பிறகு நாங்கள் அம்மையார் வீட்டிற்குள் போய் உட்கார்ந்தோம். அம்மையார் வீடு பழைய வீடு. சில இடங்களில் இடிந்துபோய் இருக்கிறது. பூஜை அரையென்று தனியே கிடையாது. அம்மையார் தட்டைமேலே தூக்கிக் காட்டினதும், ஒரு முழுதேங்காயும் வெத்திலைப்பாக்கும் வந்தது. பிறகு சில நிமிஷத்திற்குள் மறுபடியும் தட்டை மேலே தூக்கினார்கள். ஒரு புது வெள்ளிவேலும், ஒரு பழய மடங்கிய வெள்ளி வேலும், ஒரு பித்தளை விக்கிர மொன்றும் பிச்சாண்டியும் ஒரு வெள்ளிப் பாம்பும் ஒரு பித்தளை ரிஷபமும் வந்தன. இதை தலைக்கொன்றாகக் கொடுத்தார்கள். பிறகு நாங்கள் இவைகளை மறுபடியும் பழனிக்கு அனுப்பும்படி கேட்

டுக் கொண்டோம். அப்படியே அனுப்பி விட்டார்கள். பிறகு சிறிய செம்பை மேலே காட்டி எங்களிடம் கொடுத்தார்கள். "பழனி அபிஷேக தீர்த்தமும்" பன்னீரும் கொடுக்கப்பட்டது. நாங்கள் அனைவரும் அருந்தினோம். பிறகு தலைக்கு ஒரு மண பொட்டலமும் கொடுக்கப்பட்டது. சில நிமிஷத்திற் கெல்லாம் அப்பொட்டலத்தை பிரித்துப் பார்த்ததில் விபூதியும், மிளகும், மக்காச்சோளமுமாக இருந்தது. பிறகு சில நிமிஷத்திற்கெல்லாம் அம்மையார் கையை உயரத் தூக்கினார்கள். ஒரு சிறிய குங்கும பொட்டலம் அம்மையார் கையில் வந்து விழுந்தது. பிறகு நாங்கள் பழனி பிரசாதம் கேட்டோம். கால்மணி நேரத்திற்குள் பிரசாதம் அம்மையார் கையில் வந்து விழுந்தது. அதில் ஒரு சிறிய வெல்லக்கட்டியும் இருந்தது. பிரசாதம் எப்படியிருந்ததென்றால், ரொம்பவும் சூடாயும் இருந்தது. அதை நாங்கள் சாப்பிட்டோம். பிறகு தட்டில் ரூபா 1-வைத்து பழனிக்கு அனுப்பும்படி கேட்டுக் கொண்டோம். தட்டை மேலே தூக்கினார்கள். தட்டுதான் இருக்கிறது, ரூபாயைக் காணோம். இதே சமயத்தில் அவ்வூர் பெண் ஒருவள் கால்வலியாய் வந்தனள். அமமையார் கரத்தை மேலே தூக்கினார்கள். சாம்பிராணி தைலம் கிடைக்கப்பெற்ற அம்மையார் அப்படியே எடுத்துக்கொண்டுபோய் அப்பெண்ணுக்குத் தேய்த்தார்கள்.

இதே நாங்கள் நேரில்கண்ட ஆச்சரியம். அம்மையார் மிக எளியவரே- ஒரு காணிக்கையும் பெறுகிறதில்லை. சொந்த உபயோகத்திற்கு ஒன்றும் பெற்றுக் கொள்ளுகிறதில்லை. (அ. திருவேங்கிடம் பிள்ளை.)

600 008

# பாலவிநோதினி

## குழந்தைகளின் அன்பன்

| | | | |
|---|---|---|---|
| வருட சந்தா தபாற் கூலி யுள்பட | இந்தியா, பர்மா, சிலோன் | ... | ரூ. 1 8 0 |
| | பினங்கு, சிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு | ... | ரூ. 2 0 0 |
| தனிச்சஞ்சிகை | ... ... | விலை | ரூ. 0 2 0 |

1. பத்திரிகைக்கு ஜனவரிமீ முதல் டிசம்பர்மீ வரையில் ஒரு வருஷக்கணக்கு. எந்த மாதத்தில் சேர்ந்தாலும் ஜனவரி மாதம் முதற்கொண்டே சஞ்சிகைகள் அனுப்பப்படும் ஒரு வருஷத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

2. சந்தாதாரராய்ச் சேருகிறவர்கள் முழு விலாசத்தையும் தெளிவாய் எழுதியனுப்பவேண்டும்.

3. சந்தாத்தொகையை முன்னாடி செலுத்தியாவது அல்லது வி. பி. யில் கட்டியாவது பத்திரிகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

4. வி.பி. யில் பெற்றுக் கொள்வதானல் அணு மூன்று அதிகமாய்ச் செலவாகிறபடியால் சந்தாத்தொகையை மணியார்டர் செய்வதே நலம். இது முக்கியமாய்க் கவனிக்க வேண்டியது.

5. யாருக்கேனும் சஞ்சிகை சேராவிட்டால் ஒரு மாதத்திற்குள் தெரிவித்தால்தான் மறுபடி யனுப்பக்கூடும்.

6. இடம்மாறும் சந்தாதாரர்கள் அடுத்த சஞ்சிகை தங்களுக்குப் புதுவிலாசத்திற்கு வந்து சேரும் வண்ணம் தபாலாபீஸோடு ஏற்பாடு செய்துகொண்டு நமக்குப் புதுவிலாசத்தை அறிவிக்கவேண்டும்.

7. சந்தா நெம்பரைக் குறிக்காமல் எழுதும் கடிதங்கள் கவனிக்கப்படமாட்டா.

### விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு ஒரு மாதத்திற்கு | ... | ரூபா 10—0—0 |
| அரைப் பக்கத்திற்கு ,, | ... | ரூபா 5—0—0 |

காண்டிராக்ட் ரேட்டானல் சகாயமுண்டு.

விலாஸம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,
323, திருவொற்றியூர் ஹைரோட், சென்னை.

# அமிர்தாஞ்சனம்.

சர்வ நோய்களுக்கும்




வலித்த ஔஷதம்

விலை அணா 10 அணா 0-10-0

இருபத்தைந்து வருஷமாக
லக்ஷக்கணக்காக விற்று வருகிறது
அபூர்வ மூலிகைகளினால் தயார் செய்யப்பட்டு ,
அழகாய் பாக்கிங்செய்து உபயோகத்துக்குத் தயாராய்

## எல்லா நோவுக்கும்

ஒரு கைகண்ட ஔஷதம் அமிர்தாஞ்
சனமே. தலைவலி, முதுகுவலி, கீல்பிடிப்பு முத
லிய சகலநோய்களையும் நொடிப்பொழுதில் தீர்க்கும்.

## அமிர்தாஞ்சன் டிப்போ,

**7, தம்புச்செட்டி தெருவு, சென்னை.**


Vavilla Press ,Madras.